கடவுள் துணை.

# நசரைக்கலம்பகம்

மூலமும்—உரையும்.

இஃது

தஞ்சைமாநகரம்

திருவாளர்

ஆ. பொன்னுசாமி நாடார் அவர்கள்

விருப்பத்தின்படி

தஞ்சை

பூர்ணானந்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

**1925.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAR 1925
MADRAS

O/17 N
M25
180660

கடவுள் துணை

1885-ம் ஆண்டில் அச்சிட்டிருந்த பழைய

பிரதிக்கிணங்கிய

# நசரைக்கலம்பகம்

## மூலமும்-உரையும்.

இஃது

தஞ்சைமாநகரம்

திருவாளர்

**ஆ. பொன்னுசாமி நாடார் அவர்கள்**

விருப்பத்தின்படி

தஞ்சை

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

**T. M. துரைசாமிபிள்ளை அவர்களால்**

பார்வையிடப்பெற்று

தஞ்சை பூர்ணனந்த அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

**1925.**

# பதிப்பாசிரியரின் முகவுரை.

சகோதரர்களே!

இப்பிரபஞ்சத்தில் நசரைக் கலம்பகமாகிய இந்நூலைப் படித்துணர லாமெனக் கருத்துக்கொண்டு பலதடவைகளில், நான் சென்னை, புதுவை முதலான புத்தக ஷாப்புகளுக்கெல்லாம் இந்நூல் கிடைக்குமாவென எழுதிக்கேட்டும், பலரையும் விசாரித்தும், யாதொரு பயன்படாது கண்டு மிகவும் வருத்தமுற்றிருக்குங்காலையில் எனது நண்பரொருவர் தன் உயிரினும் மேலாய்க் கருதி வைத்திருந்த நசரைக் கலம்பக பழைய பிரதி ஒன்றை என்னிடம் கொடுத்தார். அதை நான் மிகவும் ஆவலோடு வாங்கி அதின் சாராம்சத்தை அறிய விரும்பி, படிக்கத் துவக்கினகாலையில் எனக்குப் பற்பல இடையூறுகள் சம்பவித்தன. சம்பவித்தாலும் அதைக் கவனியாது இந்நூலை முற்றிலும் படித்து இதன் விசேஷத்தை அறிந்துகொள்வதே எனது கடமைகளில் ஓர் முக்கிய கடமையாகுமென்றெண்ணி இதன் விசேஷம் தெரிந்து கொள்ளலானேன். ஆனதுபற்றி மறைந்துகிடந்த இந்நூல் பரவி நிற்க வேண்டுமென்பதும், நமது சகோதரர்கள் ஒவ்வொருவரும் இதை முற்றிலும் வாசித்து இதன் கருத்தைக் கண்டுணர்ந்து இதன் உண்மை வழியில் நடந்துய்ய வேண்டுமென்பதும் எனது கருத்தாகும். மேலும் என்போலவே இந்த ஞானநூலை வாசிக்க ஆரம்பிக்கும் உங்களுக்கும் வாசிப்பதற்குத் தடையான பற்பல இடையூறுகள் உண்டாகுங்காலை, அவ்விடையூறுக்குட்பட்டு இப்புத்தகத்தைக் கவனியாது மூலையில் போட்டுவிடாமலிருக்கும்படி ரொம்பவும் கேட்டுக் கொள்ளுகிறேன். நசரைக்கிறைவனாகிய சேசுபெருமானின் திருவருள்பெற்று பேரின்ப பாக்கியத்தை அடையும்படியான பக்தியை சம்பாதிக்க அனுதினமும் காலை மாலை இப்புத்தகத்தைப் படிப்பீர்களென மிகவும் நம்புகிறேன்.

இங்ஙனம்

ஆ. பொன்னுசாமி நாடார்

மிராசுதார்,

தஞ்சாவூர்.

# முன்னுரை.

அருந்தமிழறிந்த அன்பர்களே!

இப்பூவுலகின் கண் எண்ணிறந்த நூல்கள் உலாவித் திரிகின்றன. அவற்றுள் நசரைக்கலம்பக மேன்பது பல வித அணிகள் நிறைந்த ஓர் சிறந்த ஞான நூலாகும்.

இந்நூலில் பண்டிதர்களுக்கு வியப்பும், பாமரர்களுக்கு உற்சாகமும் விளைவிக்கும் செய்யுட்கள் நிறைந்திருக்கும்; தமிழ் யாப்புக்குப் பொருத்தமான பலவகைச் செய்யுள் வேறுபாடு களும் விரவியிருக்கும். தலைவன் தலைவிகளுக்கு எற்ற சிற்சில மனப்பாண்மைகளை விளக்குகிற தொல்காப்பிய அகப்பொருள் சூத்திரத்துறைகளும், அழகிய வர்ணனைகளும் அறுவகைப் பருவங்களி னியல்பும் குறிக்கப்பட்டிருப்பதோடும், அந்தாதித் தொடையாயும் இயற்றப்பட்டிருக்கும். செவிக்கு இனிமை பயக்கக்கூடிய சந்தக்கவிகளும் இதில் தென்படும். இவையெல்லாம் கலந்திருக்தல்பற்றி இதற்குக் கலம்பகமெனப் பெயர் பெற்றதுபோலும். ஆனதுபற்றி இந்நசரைக்கலம்பகத்தின் செய்யுள் நடையையும், கவியின் போக்கையும் ஒருவாறு உற்று நோக்குங்கால் தேம்பாவணி முதலிய அரிய பெரிய இனிய நூற்களை அருளிய செந்தமிழ்ப்புலவ சிரோமணியாகிய வீரமாமுனிவரின் திருவாக்காக எண்ணுதற்கிடமுண்டு. இதனை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற சாதனங்களின்மையின் 1868-ம் ஆண்டிலே அச்சிட்டிருந்த பழைய பிரதிக்கிணங்கவென்று 1885-ம் ஆண்டில் ம. சா. இயாகப்பிள்ளை என்பாரொருவர் வெளியிட்டுள்ள காப்பியில் கண்டவாறு நூலாசிரியரின் பெயரைக்குறிப்பது இன்றியமையாததாயிற்று. ஆகவே இந்நூலை இயற்றியவர் பு. வி. சாமிநாதபிள்ளை யென்று மேற்படியார் அச்சியற்றியிருக்கிற பிரதி மூலமாய் வெளியாகின்றது. இதுநிற்க; 1868-ம் ஆண்டிலே அச்சிட்டிருந்த பழைய பிரதிகளும், அதற்கிணங்க அதன்பின் 1885-ம் ஆண்டிலே அச்சிட்டிருந்த பிரதிகளும் கிடைக்குமாவென சென்னை, புதுவை முதலான பல இடங்களின் புத்தக ஷாப்புகளுக்கெல்லாம் எழுதிக்கேட்டுக் கிடைக்காததினாலும், அப்புத்தகங்களே நசித்துப்போய் தற்காலம் கிடைப்பது வெகு அருமையாயிருப்பதாலும், கடலுலகில்வாழும் மாந்தராகிய நாம் காசாசைபிடித்து, பிசாசாகத்திரிந்து, காமக்குரோத லோப மோக மத மாச்சர்யமாகிய அறுவகைக் குற்றத்திலமிழ்ந்தி அஞ்ஞான

இருளில் சுழலாமலும், மெய்ஞ்ஞானமெனும் ஈஸ்வர வழிபாட்டில் ஈடுபட்டு அருளைப் பெறும்படியாகவும், இதனைப் படித்துணர்வோர் யாவரும் தேம்பாவணிமுதலிய பிரபந்தமெல்லாமுரிய சந்தத்தோடும் படித்துணர்ந்து நசரைக்கரசனாகிய ஏசுபெருமானது வேதநெறியொழுகி மேற்கதி பெறுதற்குரிய கருவி நூலாயிருத்தலாலும், இதனைப்புதிதாய் அச்சியற்றி வெளியிடுவது அத்தியாவசியமெனக் கருதி, யாவரும் எளிதில் பாடவும் படிக்கவும் கூடாத நிலைமையிலிருந்த நசரைக்கலம்பகத்தின் மூலமும், உரையும் என்ற பழைய பிரதி ஒன்றை, நமது அன்பார்ந்த தஞ்சைமாநகரம் திருவாளர் ஆ. பொன்னுசாமி நாடார் அவர்கள் என் பாலளித்துப் பார்வையிடும்படியாய்த் தெரிவித்தார்கள். அவர்களின் அபிப்பிராயத்துக்கிசைந்து நடப்பதே தேவ ஊழியத்தின் ஓர் பெரும் பகுதியென மனவியப்புற்று யான், இந்நூலாகிய நசரைக் கலம்பகத்தில் அமையப் பெற்றுள்ள மூலத்தின் பலவகைக் கவிகளைச் சந்தத்துக்கொத்தவாறு, ஆங்காங்கு செய்யுட்கள் அடிகள் தோறும் இசை இசையாகப் பொருத்திப் பாடுவதற்குப் பிரித்திடம் விட்டும், யாவரும் எளிதில் உணர்ந்து வாசிக்கும்படியாய் உரையைப் பிரித்தெழுதியுங்கொடுக்க சத்திய வேதாபிமானத்தின் இன்பக்கடலில் மூழ்கிப்படிப்பவர், கேட்பவர் யாவரும் பரமானந்த மடையும்படியாகவும், மறைந்து கிடந்த இந்நூலெங்கும் பரவும்படியாகவும், சத்திய வேதமெங்கினுந் தழைத்து ஓங்கும்படியாகவும் ௸யாரவர்கள் இதனை அன்புடன் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்களாகையால் இதனைக்கண்ணுறும் நண்பர்கள் ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கி முற்றிலும் படித்துணர்ந்து அதன் வழியில் நிற்கவேண்டுமென்பதே எனது கருத்தாகும். அதுபோலவே மறைந்து நசித்துக்கிடந்த இந்நூல் எங்கும் பரவவென்று அச்சியற்றி வெளியிட்ட நமது தஞ்சை ஸ்ரீமான் ஆ. பொன்னுசாமி நாடார் அவர்களின் கருத்தும் அதுவேயாகும், ஆதலால் மேற்படியாரவர்கள் மென்மேலும் பக்தியில் ஓங்கி வளரும்படியாகவும், இந்நிலமிசை நீடூழிகாலம் வாழும்படியாகவும் கடவுளைப்பார்த்து பிரார்த்தித்து நன்றி பாராட்டி, வந்தனம்செலுத்தக் கடமைப்பட்டுள்ளோமென்றறிவோமாக.

இங்ஙனம்,

**T. M. துரைசாமி பிள்ளை**

சித்திரக்கவி நாவலர் & பாகவதர்

வலம்புரி, தஞ்சாவூர்.

கடவுள் துணை.

# நசரைக்கலம்பகம்.

காப்பு.

## வெண்பா.

பொன்னுலகி னின்னமுதைப் பூவிற் பொழிந்தருளு
மின்னுலவு நன்னசரை வேந்தன்மேன்—மன்னுங்
கலம்பகத்தைப் பாடிக் களிப்புறவித் தேவன்
கலம்பகனேர் தாளெனக்குக் காப்பு.

(இ-ள்.) தேவுலகத்தின் இனிய தேவாமிர்தத்தைப் பூவிலகத்தில் பொழிந்து பிரகாசத்தை வீசச்செய்யும் நன்னசரைக் கிறைவன்மேல் நிலைபெறும் கலம்பகத்தைப் பாடி இன்புற்றிருக்க இக்கடவுளின் ஒளியாபரணத்துக்கு இணையான பாதம் எனக்கு காப்பாமென்க.

மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா.

மணியாருங் கடலுடுத்த வசுமதியின் மறமழிப்ப
அணியாரு மகத்திபல்வ தமரரறிந் தருத்தியுற
அருவழியா யிருந்துலகி லகண்டபொருட் கமலனுநீ
கருவழியா யுருவாகிக் கன்னிச்சே யாயினையே

விண்டளங்க ளொருங்காக வியப்புடனின் றணியணியாப்
பண்டடவி யிசையோசைப் பாவியம்பிப் ! ரிந்துவப்பத்
தூதரெல்லாம் பணிகேட்பத் தூயரியா சனர்தாங்கப்
பாதமலர் தொழுதிறைஞ்சப் பல்லுயிர்கள் புகழ்ந்துவர.

(இவை-நான்கடித் தரவிரண்டு.)

(இ-ள்) மணிகள் நிறைந்த கடலை ஆடையாய்த்தரித்த வுலகத்தினது பாவத்தைப் போக்கவென்று நின் அழகு வாய்ந்த திருவுளத்தில் இசைந்ததை வானவர் அறிந்து ஆசை கொள்ளவும், உருவமில்லாதிருந்து உலகிலுள்ள சகலபொருட்களுக்கும் கடவுளாய் விளங்கும் நீ கர்ப்பத்தின் வழியாக மனுவுருவாகி கற்பழிவில்லாதக் கன்னியின் மகனுனாய்: வான்சேனைகளனைவரும் உம்மைக்கண்டதிசயித்து கூட்டங் கூட்டமாய் நின்று வீணை வாசித்து இசைப்புள்ள குரல் தொனியாய் பாட்டுப்பாடி உம்மை அன்போடு மகிழவும், வான துதரனைவரும் உமது ஏவலூழியங் கேட்கவும், பரிசுத்தம் பொருந்திய பத்திராசனர்கள் உமது சிங்காசனத்தைத் தாஙகவும், ஒருங்குடன் யாவரும் உமது பாத மலரைத் தொழுதுபணியவும், உயிருள்ள சகல ஜீவராசிகளும் உம்மைப் புகழ்ந்துகொண்டு வருமாமென்க.

இனி-நான்கடித் தாழிசையாறு.

மண்ணுலகோர் துயரொழிக்க மாலியென வுதித்தனகால்
விண்ணுலகோ ருடுருமாய் விதித்துதுமுன் விருகாமே
துதிபதியாய் மறைப்பொருளாய்த் துவமுளவென்னனினலமா
யதிபதியா யொருதனிக்கோ லரசியற்கை புரிவோனே.
நலமேவு மாரியமா நாட்டினிய நசரையெனுந்
தலமேவித் தயைநிழலைச் சத்தியெனத் தரித்தனையே
திருவேசு நசரையெனுந் திரியுலகு மிகவாக
மருவீச சிலையமுறல் வளமுளநின் றகையாமோ.
எவ்வுயிரும் புரந்தளிக்கு மின்குணத்தி னியைபுடனே
செவ்வுயிரா மருண்மாலைத் திருவாய்ந்த கையேந்திப்

பாராரு மனிதருக்குப் பகுத்தளிப்பப் பரிவாகுஞ்
சீராருந் திருவுளத்தின் செயலினுக்கு வரம்புளதோ.
காணிறைந்த மென்புகையுங் கவினிறைந்த மலர்மாலை
தானிறைந்த நறைவீசத் தகைமையுடன் வீற்றிருந்தோய்
மேகமின்வா கனமேறி விருதுசயக் கொடியேந்தி
நாகமின்மே லெழுந்தருளி நடுக்கேட்கும் பெருமானே.
உள்ளடங்கா வுள்ளுறைவா யுள்ளளவெல் லாங்கடந்து
தெள்ளளியாய் நின்றினிய திருப்பொழியும் பெருமானே
ஆவியென்னு மழகணங்கை யாகரித்தின் பருத்தியுறத்
தாவியணைத் திடுந்தேவ தயைநிறைந்த பத்தாவே.
வானவர்க்கு மெட்டாத வரைவிலநின் மகிமைதனை
மானவர்க்குண் மிகவெளியன் வசனமதாற் புகழ்வேனோ
விண்டோய்ந்த விபுதர்களும் விழைவுடனே யுனைப்புகழ
மண்டோய்ந்த கயவனுரை வளஞ்செவியிற் கினிதாமோ.

(இ-ள்) பூவுலகத்தாரின் துன்பத்தைப் போக்க சூரியன் போல் நீ உலகத்தில் அவதரித்தபொழுது ஆகாயத்தில் ஒரு புதிய நட்சத்திரம் தோன்றும்படி உண்டாக்கினது உனது விருதாமே; வணங்கப்படும் மெய்யான கடவுளாயும், வேதப்பொருளாயும், நிலையுள்ள என் அன்பின் நலமாயும், அதிபதியாயுமிருந்து மூவுலகத்திற்கும் ஒரு தனிச்செங்கோல் கொண்டு அரசு புரிபவனே அழகுவாய்ந்த தலைமை தேசத்தில் இனிய நசரைமாபுரமென்னும்; க்ஷேத்திரத்தை விரும்பியிருந்து உன் தயையாகிய நிழலைக் குடையாகத் தரித்தாய்; திருவேசு நசரையென்னும் வாசனை மூவுலகமும் அதிகமாய் வீச அத்தலத்தின் கோவிலிலிருப்பது மாட்சிமையுள்ள நினது அன்போ; உயிர்கள் யாவையும் காப்பாற்றி இரட்சிக்கும் இன்பகுணத் திசைப்போடு நல்லுயிராம் அருள்மாலையைச் செல்வம் பொருந்திய கையிலேந்தி உலகத்திலுள்ள மனிதருக்குப் பங்கிட்டுக் கொடுக்கப் பட்சமுள்ள உனதழகிய திருவுளத்தின் செயலுக்கு அளவுமுளதோ; வாசமிகுந்த சாம்பிராணியும், அகிற்புகையும், அழகு நிறைந்த பூமாலையும், மிகுதியாய் வாசம்

வீசப் பெருமையுடன் வீற்றிருக்கப்பட்டவனே, மின்னிய மேக வாகனத்திலேறி விருதாக வெற்றிக்கொடியேந்தி ஒளியாக ஒலி வேற்று மலைமேல் எழுந்தருளி நடுக்கேட்கும் அரசனே உள்ளத்தில் அடங்காமல் உள்ளத்தில் உறைவாய் அவ்வுள்ளத்தின் அளவெல்லாங்கடந்து தெளிந்த அன்பாயிருந்து இனிய செல்வத்தைப் பொழியுங்குருவே, ஆத்துமமென்னும் அழகிய பெண்ணை ஆதரித்து அவ்வாத்துமம் இன்ப ஆசை அடையும்படியாய்த் தாவி அணைத்துக்கொள்ளும் தேவதயை நிறைந்த பத்தாவே, வானவரும் கண்டறியக்கூடாத அளவில்லாத உன் மகிமையை மனிதருக்குள் மிகவும் எளியனான என்சொல்லால் புகழ்வேனோ! விண்ணுலகத்திலிருக்கும் வானவர்களும் ஆசையோடு உன்னைப் புகழ மண்ணுலகத்திலிருக்கும் நீசனான என் சொல் உனது வளமை பொருந்திய செவிக்கு இனிதாகுமோ வென்க.

## இனி-அராகம்.

பகையுறு கடியிடு படைமிடலறுகெடக்
தொகையற முரமொடு துணிவுள வரியினை
மருட்டரு வினைவிளை மறமுழு தொழிகவே
தெருட்டரு கதிரொளி திகழணி யுடலினை
குறையுறை துயரினி குரைபென வழிவுறப்
பொறைநிறை முறையுறை பொருவரு மறையினை
இறையிட விறையவ ரெழிலுறு மிறையினை
துறைமுறை யறமணி அதிநதி விதியினை.

(இ-ள்) பகையுள்ள பேய்கள் செய்யும் படையின் வலிமை கெட்டழியும்படி நீ அளவிறந்த வல்லமையோடு துணிவுள்ள சிங்கமானாய், மயக்கந்தரும் வினைகளை விளைவித்த பாவமுழுவதையும் தொலைக்கவேண்டி நீ தெளிந்த கதிரொளியாயிலங்கும் அழகு வாய்ந்த ஓர் உருவானாய், குற்றமுறைந்த துயரங்கள் யாவும் இனி நீர்க்குமிழிபோல் அழியும்படியாய் பொறுமையும், மாட்சிமையும், முறைமையுமுறைந்து மிக்கதோர் அரிய வேதமானாய், அரசர்

இறைகொடுக்கும் வடிவுள்ள அரசனனாய், நல்லொழுக்கமும் தருமமும் வாழ்த்துதலும் புகழும் உண்மையுமானாய் என்க.

இனி-ஈரடித்தாழிசையாறு.

ஆதிநடு முடிவுமிலா வறவாழி யறகுணனீ
சோதியுடு பதிநிகராச் சுயம்பான சுடரொளிநீ
தேவராற் றெளிந்தறியாத் திவ்வியமா நிரந்தரநீ
மூவராய் மூவரொன்றாய் முதல்வனா யிருப்பவனீ
பொருளாதி யானவனீ பொருளினுக்குட் பொருளானீ
பொருளாவி சிதையுனுநீ பொருளொடுநீ ளுப்பொருணீ
மண்ணளவும் விண்ணளவு மறையளவுங் கலையளவு
மெண்ணளவு மெட்டாம லெங்குநிரஞ்சனனீ
அன்புடனே யுனைத்தேடு மன்பருளந் தன்னிலென்று
மின்புடனே யிருந்தவருக் கின்பமிடு மீசனுநீ
நினைப்போற்றி நினைவாழ்த்தி நினைப்பவர்க டுயராகின்
மனந்தேற்றிக் குறைமாற்றி வரம்பொழியு நாயகநீ.

(இ-ள்) துவக்கமும் நடுவும் முடிவுமில்லாத தருமக்கடலாகிய ஆறிலட்சணமுள்ளவன் நீ, சூரியன் சந்திரன் முதலிய சுடரெல்லாம் ஒப்புவமையில்லாத தற்சுயம்பான சுடரொளி நீ, தேவரால் தெளிந்தறியாத திவ்வியமாயெப்போதும் இருப்பவன் நீ, பிதா சுதன் இஸ்பிரீத்து சாந்து என்னும் திரித்துவம் ஒன்றான முதல்வனாய் இருப்பவன் நீ, சகல பொருளுக்கும் ஆதியானவன் நீ, பொருள்களுக்குள் பொருளானவன் நீ, பொருளுயிர் கெட்டழிந்தாலும் அப்பொருளோடு அழியாப்பொருளானவன் நீ, பூவுலகளவும், வானுலகளவும், வேதத்தளவும் கல்வித்துறை சாத்திரத்தளவும் மனிதர் எண்ணத்தளவும் எட்டாமல் எங்கும் நிரஞ்சனனானவன் நீ, அன்போடு உனைத்தேடும் அன்பர் இதயத்தில் என்றும் இன்பத்துடனே இருந்து அவருக்கின்பந்தரும் தயாபரன் நீ, உன்னைப்போற்றி உன்னை வாழ்த்தி நினைப்பவர்கள் துயரமடைவார்களானால் அவர்கள் மனதைத் தேற்றிக் குறைகளை மாற்றி வரம் பொழியும் நாயகன் நீ யென்க.

## இனி-பலவகை அம்போதரங்கம்.

தந்தையாய்த் தனயனுய்த் தலைவ னன்பனுய்ச்
சிந்தையா சானுமாய்ச் செல்வி யாயினே
கனிவிட மறமரு கன்னி மாறில
கனியக டதிலொரு கனியு மாயினே.

(இ-ள்) நீ சகலவுயிர்களுக்குத் தகப்பனுமாய் தலைவனுமாய் சிநேகிதனுமாய் புத்தி தரும் குருவுமாய் அன்புள்ள தாயுமாயினே, சுபாசுப விஷய ஞானவிருட்சக்கனியின் விஷம் நீங்க வாசப்பூ அரும்புபோல் கற்புமாருமல் கன்னிப்பெண்ணின் வயற்றில் ஒரு கனியுமாயினே யென்க.

### வேறு.

முற்பவ மகல வுதைத்தனே முரட்பவ முறிய வொழித்தனே
பற்பவ வலியை யொடுக்கினே பழிபுரி யலகை முடுக்கினே.

(இ-ள்) நீ முற்பவமாகிய ஆதாமேவாள் செய்த பாவம் அகன்று போகும்படி உதைத்தனே, பகையாகிய குற்றத்தை முறித்துக் கொன்றனே, பல பாவ வல்லமையை ஒடுக்கினே, பழி செய்யும் பிசாசை முடுக்கி யோட்டினே யென்க.

### வேறு.

வெற்புதித்தனே யற்புதித்தனே வேதமாயினே நாதமாயினே
கதிதிறந்தனே மதிதிறந்தனே ஒருமையாயினே குருமையாயினே.

(இ-ள்) நீ வெல்லிமா மலையில் பிறந்தனே, அதிசயமுள்ளவனுயினே, வேதமாயினே, அவ்வேதத்தொனியாயினே, வானுலகைத் திறந்தனே, ஞானக்கண் திறந்தனே, ஒருமையாயினே, குருமையாயினே, என்க.

### எனவாங்கு-அகவற்சுரிதகம்.

மன்றலா நசரையில் வைத்த நின்பதங்
கன்றலா மெனதுளக் கவலை மாறவும்

வினை பிடிக நிறந் து மிருந்த வாகுலந்
தினை துணிமறையவுந் திருவணிதரித்தாள்
என்னுயிர் விளக்கத் திமிழ்வாழ்வடையு
மன்னுயிர் வாழ்க வடிவுருவாழ்க
தவத்துறுசிறப்பினர் சாற்றுந்
துவத்துடன்வந்தாய் தோன்றலாக.

(இ-ள்) நெடும் வீதிகள் அமையப்பெற்று சிறப்புற்றோங்கி வளரும் நசரைமாபுரத்தில் வைத்த உன் திருப்பாதத்தை வருத்த மான எனது உள்ளத்தின் கவலை மாறவும், துன்பமும் தரித்திர மும் அகலவும், மிருந்த வியாகுலமும் சிறுமையும் கோபமும் ஒளிக்கவும், அத்திருப்பாதத்தை திருமாலையாக தரித்தாள்வாய். அப்பொழுது என்னுயிர் விளக்கமாய் இனிய வாழ்வடையும். உனது நிலையான வுயிரே வாழ்க, வடிவுள்ள திருவுருவே வாழ்க, தவத்தில் இலங்கிய சிறப்புடையோர் சொல்லும் நிலைதவறாமல் அரசனாக வந்தாயென்க. இவையெல்லாம் ஒரு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வென்றறிக. (1)

## வெண்பா.

தேன்றலார் தோன்றலாய்த் தொன்னசரை மாபுரியி
லான்றலாப் வந்தமைந்த வையனை நா-னூன்றலாய்ச்
சிந்திப்ப தல்லாமற் றேவரென்று மற்றவரை
வந்திப்ப துண்டோ மனம்.

(இ-ள்) பழமையான நசரைமாபுரியில் அரசர்க்கரசனாய் மாட்சிமையோடு வந்தமைந்த குருவை நான் சார்பாய் என் சிந்தையில் நினைப்பதல்லாமல் மற்றவரை தேவரென்று வணங்கு வது முண்டோ என்மனமென்க. (2)

## கலித்துறை.

பனமேயினிநீ மறஞ்சேருந் தீங்கை மறந்துவிட்டுக்
கனமே வியவரண் சூழ்நசராபுரிக் காவலனைத்

தினமே கருதித் தியான செபதவஞ் செய்திடுவாய்
தனமே வியவா னகமு மடைந்திடச் சந்ததமே.

(இ-ள்) ஏ-மனமே இனிமேல் நீ பாவம் சேரும் பொல்லாங்கெல்லாம் மறந்துவிட்டு மேகமுலாவிய மதில் சூழ்ந்த நசரை மாபுரி அரசனைத் தினமும் நினைத்து தியான ஜெபதவம் செய்யக் கடவாய், இனி பொன்னுலகிலுள்ள ஆனந்த பாக்கியத்தை நீ எப்போதும் அடையும்படியா யென்க. (3)

விருத்தம்.

சந்ததமுமைந்தர்களே புந்தியிலுறுத்தி
ரந்தரமுதற்புவி யனைத்தையு மமைத்து
நந்தர்கள் பணிந்திடவே கந்தரமுதித்து
சந்தநச ரைப்புரி தரித்த விறையாமே.

(இ-ள்) வானுலகமுதல் பூவுலகம் அனைத்தையும் உண்டாக்கினவன் மனிதனுய் இடையர்கள் பணியவே மலைக்குகையில் பிறந்து அழகிய நசரைமாபுரியில் தரித்திருக்கும் அரசனுமென்று எப்போதும் மானிடரே உங்கள் புத்தியில் வருவித்துங்கொள்வீர்களென்க. (4)

வண்ணவிருத்தம்.

இறைமிகுத்த வுழையர்சித்த மிருமைபெற்ற தலைவாமற்ற விரணவீரர், மறைமிகுத்த வுரைகள்கற்று மவுனமுற்று பொறியடக்கும் வலியினாலும், கறைமிகுத்த சனனமுற்ற கசட்ழிக்க நசரைமேவுங் கருணையாதி, முறைவகுத்த துறையகற்றி முதிருமுத்தி பெறுமதிற்பின் முடிவுநீயே.

(இ-ள்) அரசர்கள் மந்திரிகள் சித்தம் பெருமை பெற்ற படைத்தலைவர் மற்ற இராணுவ வீரர் இவர் தம் பலத்தினாலும், வேதத்திலுள்ள மிகுந்த சொல்லைக் கற்று மவுனமாய் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளை அடக்கினவர் தம் பலத்தினாலும், முத்தியாகிய மோட்சமடையக் கூடுமோ? கூடாது.

எங்ஙனமெனில் இரத்தம் நிறைந்த இச்செனனம் கொண்ட சென்ம களங்கத்தைப் போக்க நசரைமாபுரியில் மேவிய கருணை ஆதிபாகிய கடவுள் ஒழுக்கமாயுரைத்த வேதநூல் வழியால் இச் சென்ம களங்கத்தைத் துடைத்து முத்திசேர்வதன்றி இவ்வழி யடையாமல் வழுவினவர்க்கு முடிவு காலம் வரைக்கும் தீ நரகமா மென்க. (5)

இன்னிசை வெண்பா.

முடிபூண் டுலகாளு மூவரசர் வந்து
படிமீண்ட தென்னசரைப் பார்த்திவநின்
னடிபூண்டார் துன்பகற்றி யார்வமுறச் செய்தாய்
மடிமீண் டெனையாளுமே.

(இ-ள்) மகுடமுடி தரித்து உலகத்தையாளும் மூவரசர் வந்துலகத்தை மீண்டளித்த அழகிய நசரைக் கிறைவனே, உன் பாதாம் புயத்தை சிரசிற் தரித்துக்கொண்டார் அவர்கள் துன்பத்தைப்போக்கி களிப்புண்டாகச்செய்தாய், அப்படியே இனி என் தரித்திரத்தைப் போக்கி இரட்சித்தாளுமென்க. (6)

விருத்தம்.

மீண்டனை புவியைப் பூண்டனை சவியை வியத்தனை நயத்தனை நசரை, யாண்டனை யன்பிற் றாண்டினை யின்பி லளித்தனை களித்தனை திறனுற், சேண்டனை யுறவு மாண்டனை பெறவுந் திருத்தினை வருத்தினை யெனக்கு, காண்டனை தெருளைத் தீண்டினை யருளைக் கலித்தனை பலித்தனை நயனே.

(இ-ள்) பூவுலகத்தை மீண்டளித்தாய், அவ்வுலகத்துக்கு அழகை அணிந்தாய், புகழுண்டாக நசரைமாபுரியை விரும்பி யிருந்து ஆண்டாய், உன் அன்பை செலுத்தினாய், இன்பத்தினால் என்னை அளித்து இரட்சித்தாய், அப்படி நான் இரட்சிக்கப்பட்ட தனால் மகிழ்ச்சியானாய், உன் திறமையினால் நான் உயர்ச்சி உண்

டாகவும் பெருமையடையவும் என்னைத் திருத்தினுய், எனக்கு நன்மை வருவித்தாய், தெளிவை தோற்றுவித்தாய், அருளைக் கொண்டென்னை தீண்டினுய், நலம் என்னிடத்தில் துளிர்த்து தழைக்கவும் அதனுல் எனக்கு லாபமாகவும் செய்தாயென்க. (7)

## சந்த விருத்தம்.

நயனுறையு நயினவெனு நகரியினி லொருவிதவை நனி பிரிய முறுமகனெனு, மயனுயிரில் விளியவுட லயனமதிற்கொணர வனை மலிதுயரி னழுதுவரவே, பயனுறையு நசரைபுரி பரமனவ டுயரகல பரிவுடனே மகவுயிரிடும், வியனுறையு மிவனளின விரை யடிக டொழுவருயிர் விளிவினகை வியனுலகிலே.

(இ-ள்) நன்மை உறையும் நயின வென்னும் நகரத்தி லிருந்த ஒரு கைம்பெண்ணனவளுக்கு அதிகப் பிரியமான பால குமாரன் இருந்தான், அவன் இளம்பிராயத்தில் இறந்துபோக அப்பிரேதத்தை வழியில் கொண்டுவரும்போது அவன் தாய் ரொம்பவும் துக்கமாய் அழுதுகொண்டு வருகையில், நற்பிரயோ சனமுள்ள நசரைமாபுரிக் கடவுள் வழியில் கண்டு அவள் துயரத் துக்கு இரங்கி அத்துன்பம் நீங்க அன்போடு அவள் மகனுக்கு உயிரைத் தந்தான், பெருமை யுறைந்த இவன் வாசத்தாமரைப் பாதத்தை தொழுவோர்களின் உயிர் நித்திய சாவில்லாமல் களிப் பாக தேவலோக நித்திய சீவியராவாரென்க. (8)

## புய வகுப்பு.

உலவியநலம்பொன் னிலநகைபருந்த வரவமுதரக்கண் ணழகு நிகரின்றி-துவநவசவையாக வைக்கப்பரிந்தன
வுவரியுடைகொண்ட வுலகதிலகண்ட வுயிர்களுள செந்துவகை வகைமிருந்த - பலபலபொருள்கோடி சிஷ்டித்தமைந்தன
உதயவரினெடுந்தண் ணிலவுமிழுதிங்க ளுடுநிறைவசந்த மெரியழலு மங்கு லுருமொடு தினநாகளுஞ் சுற்றித் திரிந்தன
ஒருநரனவன்றன், னுடலிலொருமங்கை யுருவுறவிசைந்து திரு நயநயந்து-களியுள வரமேவ நட்புற் றுறைந்தன

அலைகளிணையண்டி மனிதருயிரெஞ்ச வடர்முகில் பொழிந்த
வவரினலரெண்மர்-தவிரவுயிராயாவும் பட்டற் றழிந்தன
அணியுறையுளும்ப ரடிமைபணிகொண்ட வரிகரிடருந்த தலைமகர்
மடிந்து-மிடியிறு மவரேகச் சித்தத் திரங்கின
அடர்வு தொடர்கிறை பகையவர் நடுங்க வடல்புய னெருங்க வலை
நிலைபிரிந்து-கடனடுவழியா யிருக்கப் புரிந்தன
அடையலர்நுழைந்து கடலினுயிர்சிந்த வவருணவுகொண்ட
புனல்சிலைவழங்க-விரகுறு புரிவேகப் பற்றற்றொழிந்தன
இலகுமறைசென்ற நெறிபுனலுமேற வெழினகர்தகர்ந்த சதி
படைகலங்க-வரியொரு தினமீயி னிற்கப் படர்ந்தன
இகலருமொடுங்க சிலைமழையரங்க விழையொலிபனென்ற விறை
தலையரிந்த-சிகைவர ணகலார் செருக்கக் கனிந்தன
இருளதனிலண்டர் முழுதறச்சிதைந்து மிகலதுவிளைந்த விறைபல
துவன்று-மிதிகொடு விலை நூறி கட்டுப்பொழிந்தன
இடருடனிறந்த மனிதருயிர்தந்து மிணைபதமொடுங்கை முட்டவரு
டனங்கப்-பிணிபல துயரேகப் பெற்றிப் பயந்தன
நலமுறவுமைந்த ருனதுயிர்வருந்த நகமிகவுடைந்த தலமிக
வதிர்ந்த-புதையுறுசிலராகமட்கட் டிரிந்தன
நகைநிலையமுந்து திரையதுகிழிந்த நணிகதிருமங்கப் பகலிரவு
பொங்க-நலமுறவுயிராக வுற்றுற் றெழுந்தன
நயனுறவேயங்கு வியனுறவயங்கி நலியுலகமெங்கு மனன்மழை
சொரிந்து-சகலமுமழிக்கீறின் மக்கட் குயர்ந்தன
நடுவதுவிளம்பி நவையர்நரகுய்த்து நயவரையணைந்து நளிர்கதி
வழங்குந் திருநசரையினுதன் வெற்றிப்புயங்களே.

(இ-ள்) நன்மையுலாவிய வானுலகில் அவ்வுலக இன்பத்தை அருந்த ஞானதிக்கரென்னும் சம்மனசானவரை இணையில்லாத அழகாய் நிலைத்திருக்க ஒன்பது சபையாக உண்டாக்கிவைக்க அன்பானதும், கடலை உடையாகவுடுத்த உலகையும், அவ்வுலகத்தி லுள்ள சகல சீவஜெந்துக்களையும், வகை வகையாய் நிறைந்த பற் பல பொருள் கோடா கோடிகளையும், உண்டாக்கக் கனிவாகின

தும், சூரியனும் குளிர்ந்த கதிரையுமிழும் சந்திர நட்சத்திரம் காற்று அக்கினியும் இடிக்கும் மேகமும் எப்போதும் ஆகாயத்தில் சுற்றித்திரிய வைத்ததுவும். ஓர் ஆதி மனிதனையும் அவனுடல் எலும்பினால் ஒரு மங்கைப்பருவமுள்ள பெண்ணையும், உருவாயிசைத்து செல்வ நன்மைகளைத் தந்தவர், களிப்புள்ள வரமேவி இருக்க பட்சம் உள்ளுநறைந்ததும், பேயின் தந்திர வினைக்குள்ளாய் இவர்களும் இவர் பிதிர்களும் உயிர்மெலிந்து பாவிகளாக இவ்விருவருக்கு பிற்காலம் இவர்கள் பிதிர்களை நெருங்கிய மேகம் பரந்து மழைபெய்ய, அவர்களில் நல்லவராகிய எட்டுப்பெயர் தவிர மற்றவரும் சகல ஜீவஜெந்துயாவும் பட்டற் றழிந்ததுவும், அலங்காரமுள்ள எசித்து நாட்டில் பகைவர் இசறேல் ஜாதியாரை அடிமை ஏவல் கொண்டவர் துன்பத்தை நினைக்க ஆக்கினையாய் தலைச்சன் பிள்ளைகளைக் கொன்று தரித்திரப்பட்ட இசறேல் ஜனங்களை மீட்டுக்கொண்டுபோகச் சித்தத்திரங்கினதும், அவர்கள் போகும் வழியைப் பின்தொடர்ந்து சென்ற பகைஞர் நடுங்க நெருங்கிய மேகத்தால் இருபடைக்கும் நடுவே மறைக்க, சமுத்திரம் தன்னிலே பிரிந்து வழி கொடுக்க, அக்கடல் நடுவழியாகப் போகச் செய்ததுவும், பகைவர் அவ்வழியில் நுழைந்து கடலில் அவர்களுயிரைச் சிந்திச்சாகவும், அக்கரை சேர்ந்த இசறேலாருக்கு மேகம் போசனமும் கல்லு தண்ணீரும் கொடுக்கவும், விரகாசையால் பொங்கிய சோதோம் என்னும் நகரத்தை நெருப்பு மழையால் வேவித்து நீறுக்கிப்போட்டதுவும், விளங்கிய வேதப் பெட்டியை யூதர் கொண்டுபோகும் வழியில், யோர்தானென்னும் நதித் தண்ணீர் அடுக்காக நின்று போகிறவர்களுக்கு வழிவிட்டதுவும், அழகிய வெரிக்கோ என்னும் நகரம் மறைப்பேழையைக்கொண்டு கோட்டையைச் சுற்றி வைக்க மதில் தகர்ந்ததுவும், அந்நகரத்தரசனுறவாக அவ்வினைப் பகைத்த ஐந்தரசர் சதுரங்க சேனைகள் அஞ்ச, சோசுவனைக் கொண்டழிக்கும் போது சூரியனை ஒரு நாள் முழுதும் ஆகாயத்தில் கதிர் பரவி நிற்கச்செய்ததுவும், பகைவர் ஒடுங்கி ஓடுகையில் மேகம் வளைத்துக்கொண்டு கன்மழை பெய்து அழுத்திப்போடவும் சுதித்தை

என்னும் பெண் கையால் ஒலிபேரென்னுமரசன் வாளையுருவி அவன் தலையை அறுப்பித்ததுவும், தலை மயிரில் வல்லமை வரம் பெற்ற சஞ்சோன் என்பவனைக் கொண்டு பகைவரை வெல்ல இரக்கம் செய்ததுவும், சேதையோன் என்னும் உழவனையும் முந்நூறு வீரரையுங்கொண்டு அமலேக்கு, மதியான் என்னும் இரண்டரசரும், அவர் சதுரங்க சேனைகளும், ஓர் இரவினில் முழுதும் கெட அழித்துக் கொன்றதுவும், இன்னம் பகை விளை வித்த பல அரசரைக் கொன்றதுவும், பிசாசுகள் செய்யும் கொடிய வினைகளைக் கொன்று அழித்து எமக்கு நன்மைகளை பொழிந்ததுவும், துன்பப்பிணியால் இறந்துபோன அநேகம் பெய ருக்கு உயிரைத் தந்ததுவும், இரண்டு கை கால் வழங்காத முட வருக்கும் மற்ற பல பிணியாளருக்கும் துன்பத்தைப் போக்கி நன்மை பெறச் செய்ததுவும், மனிதர் வானுலக நன்மையை அடைய சிலுவையில் உன்னுயிரை விட்டிறக்கும்போது மலைகள் மலைகளோடு மோதியுடைந்ததுவும், பூமி மிக அதிர்ந்ததுவும், கல்லறையில் புதைக்கப்பட்ட சில பெயர் உடலோடு பூமியை விட்டு உயிர்த்ததுவும், ஒளியுள்ள பிதாவாலயத்தின் திரைச்சீலை இரண்டாய்க் கிழிந்ததுவும், அதிக ஒளி நிறைந்த சூரியன் ஒளி மங்கி மறைந்து பகல் இரவோடு ஒத்திருந்ததுவும், புதுமைகள் அதிகமாக, மீளவும் உயிர்த்தெழுந்ததுவும், நன்மையுள்ள பரம கதிக்கு பெருமையோடு எழுந்து போனதும், இனிமேல் உலக மெங்கும் துன்பமுண்டாக அக்கினி மழையை சொரிந்து சருவ சங்காரம் பண்ணி முடிந்தபின் மனிதர் அனைவரையும் அவரவர் தேகத்தோடு உயிர்ப்பிக்கவும், உயிர்த்தெழுந்த மனிதரை நடுத் தீர்வை கேட்டு பாவிகளை சபித்து நரகத்தில் தள்ளி புண்ணிய வான்களை இன்பமாய் சேர்த்து குளிர்ந்த மோட்சானந்தத்தைக் கொடுக்கும் செல்வ நசரையின் நாதன் வெற்றித் தோள்க ளென்க.

### தவம்-விருத்தம்.

புயலடரு மலைமீது யோகராகப்
போயரிய தவமிகவே புரிந்திட்டாலும்
அயலடர வனல்பரப்பி நடுவினின்றவ்
வாகமெல்லாம் வெந்தாலுஞ் சடைகொண்டாலும்
வியலடருஞ் சருகருந்தி மெலிந்திட்டாலும்
விண்ணுலகங் கிடையாது மெய்யாய்ச்சொன்னேன்
செயலடர்ந்த நசரையிறை துதித்தவ்வேதத்
திருப்பாதை நடப்பர்கதி சேர்வரென்றேன்.

(இ-ள்) மேக மடர நெருங்கும் மலையின் மீது முனிவராகச் சென்று அரியதவங்களை அதிகமாகச் செய்தாலும், தன்னருகிடம் எங்கும் அக்கினியை பரப்பி நடுவில் நின்று அவ்வுடலமெல்லாம் வெந்தாலும், சடைகளை நீளமாய் வளர்த்துக்கொண்டாலும், காட்டில் நிறைந்த சருகருந்தி தேகமெல்லாம் மெலிந்தாலும், வானுலகம் கிடையாது மெய்யாய்ச் சொன்னேன். நல்லொழுக்கம் அடர்ந்த நசரை மன்னனைத் துதித்து அவன் வேத திருப்பாதையில் நடப்பவர் பரமகதி சேருவார் என்றேனென்க. (10)

### சவலை வெண்பா.

என்னுயிர்க்குக் காதலனு மோர்நசரை யாளுகின்றோன்
மன்னுயிரைத் தான்படைத்த மன்னவனு
மின்னுயிரைத் தேடி யிதயமெலி வாய்ச்சோருு
மின்னுயிரைக் காணு வழி.

(இ-ள்) என் ஆத்துமத்துக்கு பத்தாவாம் அழகிய நசரை மாபுரியை ஆளுகின்றவன், பல்லுயிரைத் தான் படைத்த மன்னவனும், எனக்கு இன்பமானவுயிர், அவ்வுயிரைத் தேடி என் இருதயம் மெலிவாகிறது, அந்த ஒளியான உயிரைக்காணுமல் என் கண் சோருகிறதென்க. (நசரைத் தலைவனாகிய சேசு நாயகனை ஆத்துமம் என்னும் தலைவி தேடி நொந்ததென்றறிக). (11)

### கைக்கிளை கலித்துறை.

விழியா னதுதுயிற் கொள்ளாத் தலையணை மீதுகண்ணீ
ரொழியாம லோடி நனைத்திட வுள்ளமு மூசலிட
விழிவாங் குறைகண் டெழினச ரைப்பதி யேதனிவைத்
தழியாமி னென்னை யணையாமற் போன வருந்துயரே.

(இ-ள்) என்னிடத்தில் தாழ்வான குற்றத்தைக் கண்டு அழகிய நசரைத்தலைவன், அழியாத ஆத்தும மின்னாகிய என்னைச் சேராமல் தனியே வைத்துப்போன வருந்துயரத்தால் என் கண்களானவை நித்திரை கொள்ளாமல் தலையணைமீது கண்ணீர்கள் ஓயாமலோடி நனைத்திடவும் என் உள்ளத்தில் அவனில்லாத துக்கத்தால் உள்ளம் அலைந் தூஞ்சலாடவு மானதென்க. (ஏ தனிவைத் தென்பதில் ஏ-யென்பது பிரிவினைக் குறிப்பா மென்றறிக.) (12)

### ஆசிரிய விருத்தம்.

அருந்துயரை மாற்றுகின்ற மருந்தொன் றுண்டோ
வழுங்கண்ணீர்ச் சொரியாமன் மருந்தொன் றுண்டோ
முருந்திளநகை முறுவலுற மருந்தொன் றுண்டோ
முடியாத சுகமடைய மருந்தொன் றுண்டோ
வருந்து முயிர் சாவாத மருந்தொன் றுண்டோ
மதியேசொல் கலக்கமுறில் வருப்பக்கேண்மோ
பெருந்தகையார் நசரைமன்ன னருளின்மாலைப்
பிழிமருந்தா லிப்பிணிபோய்ப் பேறுண்டாமே.

(இ-ள்) அரிய துயரத்தை மாற்றுகின்ற மருந்து ஒன்று உண்டோ, அழுங்கண்ணீர் சொரியாமல் மருந்து ஒன்று உண்டோ, மயில் இறகின் குருத்துக்கு இணையான பல்லா விளநகை கொண்டிருக்க மருந்து ஒன்று உண்டோ, முடிவில்லாத நித்திய சுக பேரின்பத்தை அடைய மருந்து ஒன்று உண்டோ, வருத்தப் படும் ஆத்துமம் நித்திய சாவாகிய நரகத்தில் சாவாதிருக்க

மருந்து ஒன்று உண்டோ, என் புத்தியே சொல்வாய், உனக்கும் கலக்கமாகில் நான்தானே சொல்லக்கேள், பேரழகார்ந்த நசரை நாயகன் அருள்மாலை தரும் தேன் மருந்தால் இந்தப் பிணியெல்லாம் தீர்ந்து ஆனந்தப்பேறு உண்டாமென்க. (13)

தாழிசை.

உண்டுய ரின்பமகிழ்ந்துவா ழொண்ணல முற்றிடு மும்பரே
பண்டுயர் பொன்னச ரைப்பதி பாசமெனக்குள தாகையாற்
றொண்டுய ராவலவற்குரை சொல்லிக் கொணர்ந்திடுவீர்களால்
வண்டுயர் நீங்கு மிதற்குமை வந்தனை செய்தனன் முந்துவீர்.

(இ-ள்) பேரின்பத்தை உண்டு மகிழ்ந்து ஒளி அழகு பெற்று வாழும் வானவரே! உயர்ந்த பொன்னசரை மூதூர் நாயகன் மேல் எனக்கு அன்புள்ளதாகையால் அவர் அடிமையாகிய என் அதிக ஆவலை அவருக்குச் சொல்லி அழைத்துக் கொண்டு வருவீர்களாகில் என்னை வருத்தும் பலத்த துன்பம் நீங்கும், இதற்காக உம்மை வணக்கம் செய்தேன் போவீர்களென்க. (14)

விருத்தம்.

முந்துமெந்தையுந் தந்துவந்தையு முருகுவாசமும் பெருகு [நேசமும்
பந்திவாரமும் புந்தியாரமும் பத்திவானமுந் தித்திபானமும்
பெந்து முன்னையு மெந்த னன்னையும் பிரியவன்மையு முரிய [வன்மையு
மிந்துகாயனு ரைந்துகாயனு ரிசறே லத்தினர் நசரை நித்தனே.

(இ-ள்) முதல் என் தகப்பனும், கல்வியின் பெருமையும், வாசனைக்கு வாசனையும், பெருகிய நேசமும், ஒழுங்காகிய நாளும், என்புத்திக்கு ஒளியுள்ள முத்தாபரணமும், என் பத்தியான கதி

யும், இனிப்பா மிரசமும், என் உற்றாரும், தமயனும் என் தாயும் பிரிய நன்மையும், உரிய பெலனும், யாரென்னில் சங்கிரணிகராய் சரீரத்தைக் கொண்டவர், அவ்வுடலில் ஐந்து காயமானவர், இசறேல் ஜனங்களுக்குப் பிதாவானவர், நசரைமாபுரியின் கடவுளே யென்க. (15)

### காலம்-கலி வேண்பா.

நித்தங் கொடும்பவத்தி னெஞ்சழன்ற தேயெனக்குச்
சத்தமுதிர் வேனிற் றணர்காலங்-கைத்தபவ
வாக்கினையாந் தீநரக மாங்கூதிர்க் காலமென
நோக்கியச்ச முற்றமன நொந்தேனே-போக்கியபின்
முன்பனிக்கா லம்போன் முரண்பவத்தை நோக்கினுற்
பின்பென் னுளஞ்சிலுத்துப் பேதகமாம்-பின்பனியின்
காலம்போ லின்ன மொரு காசை யுறிலதிக
வாலமென வாமன் றகநடுங்கு -நீலமுள்ள
கார்க்கால மொப்பக் கடும்பவத்துக் காயமூது
சூர்க்காலங் கன்னைத் துலைக்கதற்பின்-சீர்க்காலங்
கண்டவிள வேனிற் காலமென வென்னிடத்திற்
றண்டவமா ஞானத் தழைதுளிர்த்துக்-கொண்டலரு
மிக்காலங் தன்னி லெழினசரை யாளுகின்றோன்
றக்கா னடிமையெனத் தான்கொண்டா-னற்காலம்
அம்பரத்தில் வாழ வருத்தியுடன் மிகவும்
நம்புகின்ற வாதனுமே நான்.

(இ-ள்) நித்தமும் கொடிய பாவத்தினால் என் நெஞ்சு அழன்று வெந்ததெனக்குச் சத்தித்துக் காற்று வீசுமுதிர்வேனி லாகிய வுட்டண காலமாங் கசப்பான பாவத்துக்கு ஆக்கினையான தீ நரகம் உண்டென்று குளிர்காலமென்ன நோக்கி அச்சமாய் மனம் நொந்தேனே, இக்காலமும் போக்கியபின், முன் பனிக் காலம் போல் பகையாகிய பாவத்தைக் கண்டபின், என் உள்ளம் சிலுத்து வேற்றுமையாகும், பின் பனிக்காலம் போல் இன்ன மொரு குற்றத்தை உட்கொண்டால் அதிக விஷமாமென்று என்

மனம் நடுங்கும், இருள்மேகம் பொழியும் கார்க்காலத்துக் கிணையாக விடப் பாவத்துக்காய் அழுது துன்பகாலத்தை துலைத்த பின்னர் செல்வகாலமாகக் கண்ட இளவேனிற்காலம் போல் என்னிடத்தில் குளிர்ந்த தவ மா ஞானம் தழை துளிர்த்துக்கொண்டு நன்மலர் மலர்ந்திருக்குமிந்தக் காலத்தில், அழகிய நசரையாளு கின்ற பெருமையுடையோன் என்னை அடிமையாகக் கொண்டான், இந்த நற்காலத்தில் வானுலகில் வாழ ஆசையுடன் மிகவும் நம்பியிருக்கிற ஆத்துமம், நான் தானென்க. (16)

## கலிப்பா.

ஆதனுரு வமைந்தானு மாதனுரு வமைந்தானு மகத்துயரத் திருப்பானு மகத்துயரத்திருப்பானு, மோதகனி யுளத்தானு மோதகனி யுளத்தானு முவர்ப்பில்லா மறையானு முவர்ப்பில்லா மறையானுஞ், சீதநய நிழலானுஞ் சீதநய நிழலானுஞ் சிறுமை மறுத்தளிப்பானுஞ் சிறுமைமறுத் தளிப்பானும், போதநன்று தருவானும் போதநன்று தருவானும், பொன்னசரைப் பதியானும் பொன்னசரைப் பதியானே.

(இ-ள்) ஆதித் தகப்பன் உருவானவனும், குருவின் வடிவாக இசைந்தவனும், மேலான இடத்துள்ள திருச் சோதியானவனும் பாவமிகுதியை அறுத்திருப்பவனும், கடல் சிகராப் பெருமையின் முயற்சி கொண்டவனும், படிப்பிக்க அதிக மனமுள்ளவனும், வெறுப்பில்லா வேதத்தை உடையவனும், எங்கும் இல்லையென்ற நிந்தையில்லாதவனும், குளிர்ந்த இன்ப அருளுடையவனும், நீர் போல் பயன்தரும் செல்வமுள்ளவனும், தரித்திரத்தை நீக்கி நற்கொடை கொடுப்பவனும், துன்பத்தைக் கொடாமல் இரட்சிப்பவனும், ஞான நன்மை விருட்சமானவனும், அறிவின் பெருமை தருபவனும், குற்றம் சேராதவனும், அழகிய நசரை நாயகனே யென்க. (17)

## வண்டு-கலித்துறை.

பதியா நசரைப் பதியாள் பரஞ்சுடர் பாலின்மிக்க
வதியா வலோடு பறந்தன தேன்கண்மீ ளாததென்னோ
துதியா மொலியால் மருண்டன வோபயந் தோற்றியதோ
திதியா னதேதவை கண்டன தாண்மலர்ச் செங்களியே.

(இ-ள்) அரசராயிருந்து நசரைப்பதியை ஆளும் பரம சுடராகிய கடவுளிடத்தில் அதிக ஆவலோடு தூதுக்குப் பறந்துபோன வண்டுகள் திரும்பாத தென்னவோ, அவரை வானவர் வாழ்த்திய வீணை ஒலியைக்கேட்டு மயங்கி நின்றவோ, தேவ சமுகத்தைக் கண்டு பயந்தோன்றி நின்றவோ, அவைகள் நிலையானதேது அவர் தாள் மலரின் செந்தேனைக்கண்டு நின்றதாமென்க. (18)

## வெண்பா.

செங்கமல மோரேழுஞ் சேதாம்ப லோரிரண்டுந்
துங்கமுகங் கண்கை காற்றுதுய்யதர மங்கண்
மதுகரங்க டந்தளிக்கும் வாழ்நசரை யூரான்
மதுகரங்கா ளுண்மின் மகிழ்ந்து.

(இ-ள்) செந்தாமரை ஓரேழும் செவ்வாம்பல் ஓரிரண்டும் உயர்முகமும், கண்களும், கால்களும், தூய உதடுகளும் மலர்ந்து தேன்களைக் கொடுக்கும், வண்டுகளே! அத்தேன்களை மகிழ்ச்சியோடு உண்ணுங்களென்க. (19)

## விருத்தம்.

மகிழ்வா நசரைப் பதிமேவு மன்னுவிந்தச் சனனமது
இகழ்வாங் குருதி தசைநரம்பு மெலும்புந்தோ லு மிசைத்திருக்கு
நிகழ்வா மலமுஞ் சீழ்நாற்ற நிறைந்த வுடலைச் சுமந்தலையாத்
திகழ்வா ழுனது திருப்பதத்திற் சேர்க்க வடியேற் கிரங்காயே.

(இ-ள்) மகிழ்ச்சியாய் நசரைமாபுரியில் விரும்பி இருக்கும் மன்னவனே, இச்செனனமானது இகழ்ச்சியான இரத்தம், சதை, நரம்பு, எலும்பு, தோலும் ஒன்றாய் இசைத்து கட்டப்பட்டிருக் குமசைவானதில் மலமும், சீழும், துர்க்கந்த நாற்றமும் நிறைந்த உடலத்தை சுமந்து அலைந்தது போதும், இனிமேல் விளக்கமான உனது திருப்பாதத்தில் என்னை சேர்க்க அடியேனுக்கிரங்காயோ வென்க. (எ-யென்பது வினக்குறிப்பாமென்றறிக) (20)

## நேரிசைச் சிந்தியல் வெண்பா

இரக்க முறுநசரை யீசன் றிருத்தாட்
கிரக்கவினைப் பூண்க தினமும்-புரக்கும்,
வரக்கலனைப் பாடுகவென்வாய்.

(இ-ள்) இரக்கமுள்ள நசரைமாபுரிக் கடவுளின் திருப்பா தத்தை என்தலை அழகாகத் தினமும் தரிக்கக்கடவது, என்னை இரட்சிக்கும் வரத்தின் ஆபரணமானவனைத்தானே பாடக்கடவ து என்வாயென்க. (21)

## குறம்-விருத்தம்.

என்வாய்ச் சொல்லுந் தவறாம லெல்லா முண்மை யாயிருக்குந்
தென்வாய்த் துகிரா நல்லீரே தெளிந்த ஞானக் குறமின்னாள்
பின்வார் சூர்ப்பந் தனிநெல்லைப் பெருக வளித்தீ ரினியுமக்கு
மின்வாய் நசரைப் பதிவானில் மிகவா யளிப்பா னிரணியமே.

(இ-ள்) என் வாய்ச் சொல்லும் தவறாமல் எல்லாம் மெய்யா யிருக்கும், அழகிய பவளவாய் மாதர்களே! தெளிந்த ஞான குறப்பெண்ணாகிய எனக்கு சுளகு நிறைய நெல்லை வாரி அதிக மாய் தந்தீர், இனிமேல் உமக்கு ஒளியாய் இலங்கும் நசரை நாயகன் வானுலகத்தின் திரவியத்தை மிகுதியாய் கொடுப்பா னென்க. (22)

## வண்ண விருத்தம்.

இரணியவிற்புரி நசரைதரித்திடு மிறைவனருட்பெறு நல்லாரே, யிமகரநெற்றியிற் சிலுவையரிக்குறி யிடவொருமித்தது மெய்யாமே, அரணவெழிற்குறி நுதலில விர்த்திட வடவிடமொய்த்கிடு மொல்லாரு, மருபமெனத்திரி மகன்விற லற்றிரி யதிசய முற்றுறு மல்லாதே, காணமலிப்பொறி கதவையடைத்தணி கவினுறுமிக்குறி மல்லாலே, கடுகியமுட்டிட முடுகுமுயிர்ப்பொலி கதவையுடைத்திட வொல்லாதே, கிரணமலித்தகை பெருகியவிக்குறி கிளர்தருமுற்று முவப்பாமே, கிலமெலிவுற்றிட மதியமுமக்கொரு ~~கிளவியமுமக்கொரு~~ கிளவியுரைத்திட நில்லாதே.

(இ-ள்) பொன்னொளியாய் இலங்கும் நசரைமாபுரியில் தரித்திருக்கும் அரசன் அருளைப்பெற்ற மாதரே! பிறையொத்த நெற்றியில் சிலுவை பச்சைக் குறியிட்டுக்கொள்ள நீங்கள் ஒருமித்தது மெய்யாமே. ஆகையால் காவலாகிய இவ்வழகிய குறி நெற்றியில் இலங்கியிருக்க, யுத்தத்துக்கு கூடிவரும் பகைவரும், அருபமாய்த் திரியும் மன்மதன் திறமை அழிந்து தோற்கவும் அக்கினி அதிக வெற்றியைத் தருமல்லாமல் ஐம்பொறி என்னும் கண், மூக்கு, காது, நாவு உடலின் கதவை அடைத்து, அலங்கார அழகாகிய இக்குறியின் வல்லமையால் தாழிடல், முடுகிவரும் தென்றலால் இக்கதவை உடைக்கவும் திறக்கவும் இயலாதே. கிரணபிரபை பெருகிய இக்குறிதரும் ஒளியில் எப்போதும் இருந்து மகிழ்ச்சிகொண்ட உமக்கு, சந்திரனால் அற்ப மெலிவு வரவும் நீங்கள் அதை நோக்கி ஒருசொல் சொல்லவும் நில்லாதென்க. (23)

## இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

நில்லா துடல நிலையிலையென் னெஞ்சேகேள்
வல்லான் றிருநசரை மன்னன் மருமலர்த்தா
ளல்லா துனக்கே தருள்.

(இ-ள்) நில்லாத உடலமிது, என் நெஞ்சே! கேள், வல்லமையுள்ளவன் திரு நசரை மன்னவனும், அவன் வாசமலர்ப் பாதமல்லாமல் உனக்கு வேறு அருள் இல்லையென்க. (24)

## விருத்தம்.

அருளையளித்தானு மருளையளித்தானு மன்புபுரிந்தானு மின்புபுரிந்தானு, மருளையொளித்தானும் பொருளைதெளித்தானும் வாரிநடந்தானும் பூரியிடந்தானுங், கருளையறுத்தானும் வெருளைமறுத்தானுங் காவிலுறைந்தானு மாவிநிறைந்தானும், பொருளையுகைத்தானுந் தெருளையிகைத்தானும் புன்னசரற்றானு மென்னசரைத்தானே.

(இ-ள்) கிருபையைக் கொண்டு காத்தவனும், நற்கொடைகொடுத்தவனும், அன்பாய் இரங்கினவனும், இன்பம் செய்தவனும், பிசாசை மறைத்தவனும், மெய்மையை விதைத்தவனும், கடலில் நடந்தவனும், செல்வவிடந்தானவனும், இருளை அறுத்தவனும், அச்சத்தை நீக்கினவனும், பூங்காவனத்தில் உறைந்திருந்தவனும், ஆத்துமத்தில் நிறைந்திருந்தவனும், உரிமையை செலுத்தினவனும், தெளிவை தந்து நடத்தினவனும், நீசச்சேறறுத்த அசுத்தமற்றவனும, என் நசரைத்தானென்க. (25)

## மருட்பா.

தானாயிருப்பான் றனக்குநிக ரொன்றில்லாக், கோனான சரைக் குடிகொண்டான், வானுட ராவலாய் நிரையாகி பூவிரை தூவலாய்நளிர் தூவிமேலொளிர், பரத்தகோளை பழித்ததாளைச் சிரத்திலோகை தரித்துவாகை, மன்றலர்கொடியிவை மண்ணவர் நனிசுவை, யென்றவ ரொலியெழ வெம்பரனடி தொழ, மேவுநாயகன் விளங்கிய வாவிநாயக னன்படி பணிவமே.

(இ-ள்) தானாய் இருப்பவன், தனக்கொருவர் நிகரில்லா வரசன், நசரைமாபுரியில் குடிகொண்டவன், இவனை வானுலகத்

தார் ஆவலோடு ஒழுங்காய் நின்று வாசமலரை சொரிந்து, ஆகாயத்தில் குளிர்ந்த வெண் கதிர்பரந்த நவக்கிரகத்தைப் பழித்த பாதத்தை தன் தலைமேல் பிரியமாய் தரித்து, வெற்றிமாலையும், வாசமலர்க்கொடியும், மனிதருக்கு அதிக சுவையும், இவைகளென்று அவர்கள் ஓசையெழப் புகன்று நமது கடவுளின் பாதத்தை தொழ விரும்பு நாயகன், விளங்கிய ஆத்துமத்தின் நாயகன் நன்படியை பணிவோமென்க. (26)

## சமுக உல்லாசம்.

பணியொளி நசரையி லிறையுறைசமுகமே பகலெழிலுரையிடலாமோ, பருமணிகனமிசை பதியரியணையமை பரமனையினிதட்டுடி, பனியினுமரிணமே படர்திருவுருவொடு பரிசுரரவை பலகோடி, யணியணிநிரைநிரை கொடிகுடைகவரியு மடரிடவணுகுவர்கோடி, யகிலுளபுகைமுகி லெனபாவிடநறை யலருறைபொழிபவர்கோடி, யடிகுணிலதுகொடு முருடொடுமுரசமு மதிரொலியிடுபவர்கோடி, துணியுறிபலகவி தொடையடி யசையிசை துளையுளகுழலொடுபாடி, துதிபதியதிபதி யருணதிபதியென தொழுதடிவிழுபவர்கோடி, துணையடிமிசைமது மலரணியணியவே துறுவலினிறைபவர்கோடி, மணியணிபதமதி லிணைவிழிமருவியே மலருதடுறுபவர்கோடி வலியுளநவசுவை புகழளிகடவுளை மகிழ்வோடு நினைவுறினுமே, மனமிகையொடுபல பகையறுமுபரிய வடிவுலகணிதருவானே.

(இ-ள்) ஆபரணத்தின் ஒளி நிகராகிய நசரைமாபுரியில் கடவுளிருக்கும் திருச்சமுகமானதுவே, சூரியன் அழகை ஒப்பனையிட்டு உரைக்கலாமோ, பருமணிகளை பொன்னில் பதித்த சிம்மாசனத்தில் அமைந்த பரமபொருளை இனிதாய் நாடி, பனியிலும் வெண்மை பரவிய திருவுருவோடு பாதுகாவலாகிய வான்வர் சபை பல கோடிகள், அழகுக் கழகாக வரிசை வரிசையாக இருபுறத்தில் கொடிகளும், குடைகளும், வெண்சாமரைகளும், நெருங்கி யிடும் படியாய் அணுகிச்சேர்பவர் கோடிகளும், அகிற்

கட்டை சாம்பிராணியின் புகைகளின் மேகம்போல் பரவவிட்டு வாசமலரை மழைபொழிவனபோல் பொழிபவர் கோடிகளும், அடிக்கும் குறுந்தடிகளைக்கொண்டு, முருடு முரசமும் மற்றப் பல வாத்தியமும் முழக்குபவர் கோடிகளும், தெளிவாய் பல கவிகளை தொடையடி அசை இசை வழுவாமல் துளையுள்ள ஊதுகுழலோடு இசைப்படப் பாடி வாழ்த்தி, தன் தலைவனென்றும், அரசனென்றும், அருட்குடையோனென்றும் தொழுது அவர் பாதத்தில் விழுபவர் கோடிகளும், இதன்றி இரண்டு திருப்பாதத்தில் தேன்மலர் மாலையணியவே நெருங்கி நிறைபவர் கோடிகளும், மாணிக்க வழகாகும் பாதத்தில் தமது இருவிழிகளைச்சேர்த்து மலர் வாயைப் பொருத்தி முத்தமிடுபவர் கோடிகளும், இந்தவிடவாக திறமையுள்ள நவசபை வானவரும் புகழப்பட்ட தயைக் கடவுளை, மகிழ்ச்சியோடு நினைத்து நாம் புகழ்வோமானால் மனத்துன்பமும் பல பகையும் அற்றுப்போவதன்றி உயர்ந்தவடிவுள்ள ஆனந்த அலங்காரத்தை தருவானென்க. (27)

## கன்னித்தாயிரங்கல் தாழிசை.

வானைநன்கொடையாயளித்தவன் வானைநன்கொடையாயிடான்
வானவர்க்கொளிதந்தவன்பல வானவர்க்கொளிதந்திலான்
சேனைமன்னவர்காணநின்றவன் றேடுமன்னவனுக்குமுன்
றிருடனுக்களிதந்தவன்மறு திருடனுக்களி தந்திலான்
மானையெய்தவன் வானுறத்திரு மானவனுருவாயினன்
மான்றொடர்ந்தரசுக்கவன்மட மான்மகன்றனையீந்தனன்
வேனைமின்னுயிர் துன்பநீக்கிலா வித்தியாசமிதென்பனே
வென்றிபொன்னசரைக்குளாதிபன் வேதவுண்ணெறி நீதமே.

(இ-ள்) வானுலகத்தை நன்கொடையாய் கொடுத்தவன், அவ்வானுலகை பாவத்தில் சலஞ்சாதித்து திரும்பாமல் சாகும் பாவிகளுக்கு நன்கொடையாய் கொடான், வானவர்க்கு பிரகாசமென்னும் வரந்தந்தவன், அவ்வானவர் கணங்களில் மூன்றத்தொருபங்கு தேவசித்தத்துக்கு விரோதம்நினைக்க, அவர்க்கு பிர

காசத்தை மாற்றி பேய்க்கணமாகத் தள்ளினான், படைச்சேனைகள் சூழவந்த மூவரசர் கண்டு வணங்கத் திருவுளமானவன், தன்னைக் கொல்லத்தேடும் ஏரோதை மன்னவன் காணாமல் மறைந்து போனான், இரங்கி அழுத வலது பாரிசக் கள்ளனுக்கு இரட்சணியம்தந்தவன், இடதுபாரிசக் கள்ளன் இரந்துகொள்ளாததினால் இரட்சணியம் தந்திலான், மானை எய்த பிலாசி வானுலகு அடையும்படியாய் அம்மானின்மேல் செல்வ மனிதனுருவாய் நின்று பேசினான், பின்னும் ஒருமானைத் தொடர்ந்துபோன திறையான் என்னும் அரசனுக்கு அவன் தேவியையும் மகனையும் தந்தான், அதிக அழகுள்ள ஆத்துமப் பெண்ணாகிய என்மகள் துன்பம் நீக்காமலிருப்பது வித்தியாசமென்பேனோ, இது வித்தியாசமல்ல, வெற்றிபெற்ற பொன்னகரைக்குள் இருக்கும தலைவன் வேத நீதத்துள்ள முறைமைப்படி நடப்பிக்கும் நன்னெறி வழியாமென்க. (28)

## கழிநெடில்.

நீதமுறையு மறைமொழியா னிருபமருளு நியநிமல னிருபப்படிக்குத் தவறாம னினைத்துத்தேடும் பெயர்களுக்கு, வேத முறையு மதிமுறையும் வியன்றுகடந்த திருவேந்தை விரும்பிக் காண்பீரெனவுரைத்த மெய்யாமுறையும் பொய்யாதே, காதன் முறையாற் றேடுகின்ற கனிவென்சுவையு மனங்கூரக் கண்ணிற் காண வாராயோ கனகநசரைப்பரியூரா, பாதமுறை யாற் றழு விமுத்தம் பரிந்தேயிடுகத் தேனினிமை பருகியின்பக் கடறோய மருவியாட்கொண் டாளாயோ.

(இ-ள்) நீதி யுறைந்த வேதமுறையால் அவ்வேத கற்பனைகளை கற்பிக்கும் மெய்யான கடவுளின் கட்டளைப்படிக்கு தவறாமல் நடந்தவனைத் தேடும் பெயர்களுக்கு வேதநெறிவழிக்கும், அறிவின் கூர்மைவழிக்கும், எட்டாதகன்று கடந்திருக்கும் செல்வ அரசனை விருப்பமுடன் காண்பீர்களென்று உரைத்த மெய்யான சொல் பொய்யாகாதே. இங்ஙனம் ஆசை முறைமை

யால் தேடுகின்ற என் பட்சமுள்ள மகளும் மனங்களிகூர அவள் கண்ணில் காண வாராயோ, பொன்னசரைப் புரியூரா! உனது பாதத்தை நன்முறைமையினால் தழுவி இரக்கமாய் முத்தம் செய்யவும், அப்பாதத்தின் இன்பத்தேன் இனிமையை அருந்தி யின் பக்கடலில் தோயவும், தேவரீர் எழுந்து அடிமையாகச் சேர்த்துக் கொண்டு ஆளாயோ வென்க. (29)

## சந்த விருத்தம்.

கொண்டல்முடி யண்டிவளர் கொம்பர்மிசை பம்புமலர் குந்திகள்பொழிந்துவிடவே, வண்டினமு முண்டுமயல் கொண்டிறை மடங்கிதரை மண்ணினிற்புரண்டுறுநிதங், கண்டவர் மகிழ்ந்திவைகள் சம்புகனி யென்றணி கரங்களிலணிந்துயிருறக், கொண்டல்பட விண்டுமருள் சென்றிடவெ ருண்டிடுவர் கொன்னசரையம்புரியிலே.

(இ-ள்) மேகம் தலையில் பொருந்தும்படி வளர்ந்த மரக்கொம்புகளில் நெருங்கிய பூக்கள் தேன்களைப் பொழிந்திடவே, வண்டினங்கள் அவை அருந்தி மயக்கங்கொண்டு சிறகை மடக்கித் தரையில் வீழ்ந்து மண்ணில் புரண்டு நித்தம் கிடக்கும், கண்டவர் மகிழ்ந்து இவைகள் நாவற்கனியென்று அழகிய கைகளில் எடுத்து அந்த மணல்போக வாயால் ஊதுவார், அந்தக்காற்றுப் பட்டவுடனே மயக்கம் நீங்கி பறந்துபோக அவர் திடுக்கிட்டுப் போவார், பெருமையுள்ள நசரைமாபுரியிலென்க. (30)

## கலித்துறை.

புரிவாய்க் கடனீ ரெடுத்துல கெங்கும் பொழிந்திடவே
சரிவான் குயின்கா ளுமைப்போல் விழிகள் சலஞ்சொரிந்து
பிரிவா னசரைமன் காணு வயர்வு பெயர்ந்தனனீர்
பரிவாகச் சொல்லி யருண்மாலை கொண்டுறிற் பாக்கியமே.

(இ-ள்) சங்கு உலாவிய கடலிடத்து நீரெடுத்து உலகமெங்கும் பொழிய சாய்ந்தோடும் மேகங்களே! உம்மைப்போல்

என் கண்கள் சலப்பிரவாகமாகச்சொரிந்து என்னைப்பிரிந்த நச ரைக்கரசனைக் காணுமல் வருத்தப்படுகிறேன். ஆகையால் அவ ரிருக்கும் இடத்தில் நீங்கள் போய், என்பேரில் அவருக்கு அன்பு வரச்சொல்லி அவர் அருள்மாலையை வாங்கிக்கொண்டு வந்தால் எனக்கு பாக்கியமாமென்க. (31)

## களியன் விருத்தம்.

பாக்கியனு கியநசரைப் பார்த்திவன்ருட் பதுமமது பான முண்டு, தேக்கியவ வாவுடனே செயபுயத்தின் வலியதனைத் தின மூமெங்கள, வாக்கினுற் புகழ்ச்சிசொல்லி மனமிகவே மகழ்ச்சி யுற வானின்மீதே, யூக்கியினிக் களிகொள்ளு முடைக்களியர் சன்னிபமில் லுயர்சன்மோரே.

(இ-ள்) பாக்கியவானுகிய நசரைக்கரசன் பாதத்தாமரை மலரில் பொழியும் மதுபானங்களைக் குடித்து, பெருகிய ஆசை யோடு அவன் வெற்றித்தோளின் வல்லமையைத் தினமும் எங்கள் வாக்கினுல் புகழ்ச்சிகளை சொல்லி, மனம் மிகவே மகிழ்ச்சி உண் டாக வானுலகில் யேறி களிப்புக்கொள்ளும் செல்வக்களியர் நாமே, நாங்கள் உவமை இல்லாமல் உயர்ந்த பிறவிகளா மென்க. (32)

## கழிக்கரைப் புலம்பல்.

சன்னவலராற்கேசரமே சாலியலராற்கேசரமே சயங்கு மார் வமறிந்திலேயோ தாவுமார்வமறிந்திலேயோ. புன்னைநிறைந்த கன வனமே பொழிகண்ணிறைந்தகனவனமே. பூவைக்கிளியுமன்றி லதே பூரிக்களியுமன்றிலதே, தன்னமுறையுங்கேகயமே சலிப் பேன்முறையுங்கேகயமே, தாலமரமேவாரணமே தாழைமரமே வாரணமே, நன்மைபுரிவாமெனக்கினியார் நயமேபுரிவாமெனக் கினியார், நாடிப்பதியெய்திடவருந்திர் நசரைப்பதியெய் திட வருந்திர்.

(இ-ள்) சன்னமலர் நிறைந்த மகிளமரமே, அம்மலரின் தேனைக்குடிக்கும் வண்டே, என் மனத்தை அசைக்கும் ஆசையை அறியவில்லையோ, நான் தாவித்தேடும் என் அன்பை உனக்குச் சொல்லவில்லையோ, புன்னைமரத்துஇனமாய் நிறைந்த சோலையே, என்கண் நிறையப்பொழியும் நீர்களானது மேகம்பொழியும் நீரொத்தனவே, நாகணவாய் பட்சியே, அன்றில் பட்சியே, உங்களுக்கு களிப்பான காலமாயிருக்கிறது எனக்குச் செல்வக் களிப்பானதுஇல்லையே, என்னைப் போல் சிறுமைப்படும் கேகயப் பட்சியே, என்னைப்போல் சலிப்பாயிருக்கும் மயிலே, பனைமரமே, சமுத்திரமே, தாழைமரமே, சங்கே, உபகாரம் செய்யுங்கள், எனக்குப் பிரியமானவர்கள் நீங்களே, உமக்கு உபசரணை செய்வாமெனக்கு உம்மை அல்லாமல் இனியார்? நீங்கள் அவர் இருக்கும் இடத்தைத் தேடிப் போக வருத்தப்படுங்கள், நசரை நாயகன் வர மன்றாடுவீரென்க. (இளவேனிற் பருவம் வழுவின்றித் தலைவனை நோக்கி தலைவி புலம்பினதென்றறிக.) (33)

## விருத்தம்.

வருந்துநெஞ்சங் குளிர்ந்திடவே வகைவேறில்லை மாங்குயில்காள், பொருந்திப்பேடை யுடன்றிரியும் பொலன்றாவிய நல்லோதிமங்காள், திருந்தும் விண்ணில் விரைந்தோடுஞ் சிகரிமுந்துங் கொய்யடிகா, ளிருந்து நசரை நகராளு மிறையைக்கூவி யழைத்திடுவீர்.

(இ-ள்) வருத்தப்படும் நெஞ்சம் குளிர்ச்சியாகவே வகைவேறில்லை, மாங்குயில்களே! பேடைகளோடு கலந்து திரியும் பொன்னிறமான சிறகையுள்ள அன்னங்களே! அழகிய ஆகாயத்தில் விரைவாய் பறந்தோடும் கருநாரை வெண்ணாரை மற்ற நாரைகளே! நசரைமாபுரியில் இருந்தாளும் அரசனைக் கூவி அழைத்து வாருங்களென்க. (34)

### தூது-தாழிசை.

கூவி நன்னசரைவாழுங் கொற்றவனைக் கொணரவானினிய தூதனே, குவலயத்தினிலுதித்த நாண்முதலென்கூட நிற்பதை யெண்ணுமலே, யாவியுற்றபிணியோ டலக்கண் மிகவஞ்சிதங் கலந்த நெஞ்சதை, யன்புதம்பமென நம்பி தூது விட்டவவதி யானதை யென்சொல்லுவேன், பாவி பேதை மதியால் விளைந்த குறைபலித்த தாமிதைப்பிறர்க்கியான், பகறிற்கேட்பவர் பழிப்ப தல்லதொருபண்பிலாபமிலை முன்னமே, மேவிபோனது மென்னு விநாயக னல்வென்றித் தோளிலருண்மாலையில், வியந்துதன்னின் மகிழ்ந்து பேசவும் பயந்து செய்கருத்தழிந்ததே.

(இ-ள்) அழகிய நசரையில் வாழும் அரசனை அழைத்துக் கொண்டு வர, வானுலகத்தின் இனிய தூதனே, நான் உலகத்தில் செனனமாயுதித்த நாள் முதற்கொண்டு என்னோடுகூட இருப்பதை எண்ணுமல், என் ஆத்துமத்துக்கு வரும் பிணியோடு கூடத் துன்பமிகவும் உண்டாய் கலந்த நெஞ்சத்தை அன்பான துணையென்று நம்பி, தூதுவிட்ட அவதியானதை என்னென்று சொல்லுவேன், பாவி நான் என் அறிவில்லாப் புத்தியால் விளைந்த இந்தப் பொல்லாங்கு எனக்குப் பலித்ததாம், இதைப் பிறர்க்கு யான் சொல்லில் கேட்பவர் பழிப்பதல்லாமல் ஒரு குணமும் இலாபமும் இல்லை, முன் விருப்பமாய்ப் போன என் நெஞ்சமான என் ஆத்தும நாயகன், நல்ல வெற்றித் தோளிலும் அருள் மாலையிலும் அதிசயித்துப் பார்த்து தன்னில் தான் மகிழ்ந்து அவரோடு பேசவும் பயந்து, தான் செய்யவேண்டிய கருத்தும் அழிந்து போனதென்க. (35)

### இடைச்சி-விருத்தம்.

கருட்பாவமெண்ணு மனப்பால்குடித்துக் கனத்தாவலாந் தொறுவியே, மருப்பால் சுரப்பால் கொறிப்பாலுநாகின் மருப் பாலுடன் கொச்சையின், றெருட்பால்கலப்பா வினிப்பாகவில்லா திருப்பால் வரப்பாலுறி, லருட்பா லளிப்பால் சுவைப்பால் பொருட்பா லளிப்பானே கோனசரையான்.

(இ-ள்) இருளாகிய பாவம் உன்னிடத்தில் இருப்பதை எண்ணுமல், மனப்பால் குடித்து பொன்மீது ஆவலாய்த்திரியும் இடைச்சியே. கொம்புள்ள பசுமாட்டுப்பாலும், செம்மெறியாட்டுப்பாலும், எருமையின் வாசனையுள்ள பாலும், வெள்ளாட்டின் தெளிந்தபாலும், கலப்பாக இனிப்பாய் இல்லாமல் விட்டு, இனி செல்வக் குணமுள்ள கடவுளின் வரம்பெறும் பாரிசம் சேரில் தயைப்பங்கும், இரட்சணியத் துரிமையும் இனிமைப் பாலாம், பொன்னுலகில் இடத்தையும் கொடுப்பானே நசரையானென்க (36)

## சித்து-கட்டளைக்கலிப்பா.

கோனிருந்திடு நன்னசரைக்குளே குடியிருந்து நிலைத்திடுஞ் சித்தனுன், நானிலத்துள்ள சித்தரென்போலவே நல்லவித்தைகள் செய்திடவல்லரோ, கானிலத்து மருந்து மில்லாமலே கடைச் சரக்கு மில்லாமலீ யத்தையே, வேணியக்குகை தன்னிலிட்டூதிடில் விளம்பமின்றிநல் வெள்ளியதாகுமே.

(இ-ள்) அரசனிருக்கும் நன்னசரைமாபுரியில் நிலையான குடியாயிருக்கும் சித்தன்நான், குறிஞசி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலம் நான்கிலுமுள்ள சித்தரெல்லாரும் என்னைப்போல நல்லவித்தைகள் செய்திட வல்லவர்களோ? நான் காட்டு மருந்தொன்றில்லாமல் கடைச்சரக்கும் கலக்காமல் ஈயத்தை அதிக இசைப்பாக குகையிலிட்டு ஊதினுல் தாமதமின்றி நல்ல வெள்ளியதாகுமென்க (வெள்ளியதென்பது வெள்ளையாகுமென்றறிக) (37)

## சம்பிரதம் விருத்தம்.

வெள்ளிவருமுன்னம் பொன்னுக்குவேனுன் வேண்டிய போதுடனும் பொன்னுக்கி யின்னங், கள்ளமன்றி யிரும்பைப் பொற் பணமாய்ச்செய்து கனமானதராமும் பொன்னுக்கி யின்னம், விள்ளுமலர்க் காவணிசூழ் நசரையூரில் வேங்கைகளைப் பொன்னுக்கி வைத்ததன்றி, உள்ள பசுமாடுகளைப் பொன்னுய் நானே யுண்டாக்குஞ் சம்பிரத மோசையாமே.

(இ-ள்) வெள்ளிக்கிழமை வருதற்கு முந்தியநாள் வியாழம், வியாழமென்பது பொன்னாகையால் பொன்னுக்குவேனென்றான்; வேண்டியபோது உடலையும் பொன்னாக்கிவைத்து, பொய்யில்லாமல் பாம்புக்கு படமுண்டாகச்செய்து, கனமான தராமென்னும் பொன்னாக்கி, இன்னமும் மலர்ந்த மலர்ச்சோலை அலங்காரம் சூழ்ந்த நசரையூரில் வேங்கை என்னும் பொன்னைப் பொன்னாக்கி வைத்ததன்றி, அவ்வூரிலுள்ள பசுமாடென்னும் பசும்பொன்னைப் பொன்னாக நானே உண்டாக்கும் வித்தை பிரியமாமே யென்க. (38)

வெண்பா.

கைப்புப் புளிப்புத் துவர்ப்புரைப்புத் திக்திப்பாஞ்
செப்புங் கொலைகாமஞ் செய்களவுந்-தப்புள்ள
பொய்முரணு மாசைப் புகரகல நன்னசரை
மெய்முதல் வனைப் பணிகுவீர்.

(இ-ள்) கசப்பு புளிப்பு துவர்ப்பு உறைப்பு கரிப்பு திக்திப்பென்னும் அறுசுவைக்கிணையான பாவங்களாவன, கொலையும் காமமும் செய்யுங்களவும் குற்றமுள்ள பொய்யும் பகையும் ஆசை என்னும் பாவங்கள் அகல, நன்னசரையில் வாழும் மெய்யான கடவுளை வணக்குவீர்களென்க. (39)

தாழிசை.

வீரம்பொருந்திய நீதனார் வேழ்வி பொருந்திய வேதனார்
நாரம்பொருந்திய போதனார் நன்னசரைப்புரி நாதனார்
வாரம்பொருந்துரைபோதனார் வானமிர்தம் பொழிசீதனா
ராரம்பொருந்தரு ணாதனா ராறுதறந்திடு பாதனார்.

(இ-ள்) வீரியம் பொருந்திய நீதனானவர், தேவபூசைக்கு பொருந்திய வேதம் அருளினவர், அன்புபொருந்திய குருவானவர், நன்னசரைப் புரித்தலைவனானவர், நாள்தோறும் நடக்கும்

முறைமையைப் படிப்பிக்கும் உபாத்தியானவர், வானுலக அமிர்தத்தைப் பொழியும் குளிர்ந்த சந்திரனானவர், முத்தாபரணமாக அருளைத்தரித்த கடவுளானவர், சகலருக்கும் ஆறுதலைத்தரும் பாதமுள்ளவரென்க. (40)

## விருத்தம்.

பாதகந்தனை மறுத்திலை பொறுத்திலை பரந்திடுநினைவினை நிலைத்துப், போதகந்தனை யிறுத்திலை பொறுத்திலை புண்ணிய நெறியினி னடக்கச், சாதகந்தனை யுறுத்திலை நிறுத்திலை தவமுற நெஞ்சமே யினிநீ, மேதகம்பெறக் குறித்திடு பொறித்திகழ் மெய் நசரையி னிறைக்காவே.

(இ-ள்) பாதகத்தைப் போக்கவில்லை, அதை வெறுக்க உன்னை வருத்தம் செய்ததில்லை, பாவித்திரியும் உன் நினைவை நிலையாக நிறுத்தி ஞானங்களைச் சொல்லவில்லை, அந்த சுமையை அதின்மேல் சுமத்தவில்லை, அதை புண்ணியவழியில் நடக்கச் சாதகப்படுத்தவில்லை, அதைச் செவ்வையாக்கவில்லை, நெஞ்சமே, இனி நீ தவத்தைக்கொண்டு மேன்மைபெற செல்வம் விளங்கிய மெய்யான நசரை அரசன் தயையின் சோலையை நினைத்திடுவாயென்க. (41)

## அம்மானை.

காவணிசூழ் பொன்னசரைக் காவலனு மெய்யானல்
தேவனுடன் மாந்தனென்றாய்ச் சேர்ந்தனன்கா ணம்மானை,
தேவனுடன் மாந்தனென்றாய்ச் சேர்ந்தனனென் றாமாகில்
மேவலர்க்கைக் குள்வருந்தி வீவதே னம்மானை
வீசெருப்ப வீந்தன்னவீ யாதுயிர்த்தா னுமாகில்
தேவனுமே மாந்தனுமாய்ச் சேர்ந்தனன்கா ணம்மானை.

(இ-ள்) ஒழுங்குள்ள சோலை சூழ்ந்த பொன்னசரைமாபுரிச்கரசன் மெய்யான தேவனும், மெய்யான மனிதனும் ஒன்றாய்

சேர்ந்தவன்காண் அம்மானை, அத்தன்மைத்தாய் அவ்விரண்டும் ஒன்றாய் சேர்ந்தவன் என்றதாமாகில், பகைவர் கைக்குள் அகப்பட்டு சாவதேன் அம்மானை, மனிதர்செய்த பாவமென்னும் நித்திய சாவை தான்கொல்ல, செத்துச்சாகாமல் உயிர்த்தெழுந்தான், ஆகையால் மெய்யான மனிதனும் மெய்யான தேவனும் ஒன்றானவன் காண் அம்மானையென்க. (42)

## வெண்பா.

அம்மா னமராட வாங்கிறும் பொதுங்கிவென்ற
அம்மானன் றாவீதை யன்பாய்த்தன்-னம்மானைக்
கொண்டுநிலை மகவாய்க் கூவோர்புகழவந்தான்
பண்டுநசரைப் பதி.

(இ-ள்) தாவீதன் அம்மானாகிய சவுலோன், தாவீதன்மேல் யுத்தம்செய்ய மலையின்மேல் போய் மறைந்திருந்தவனைவென்ற அந்த அரசர்க்கரசனானவனை அன்பாகத் தன் தகப்பனாகக் கொண்டு தான் அவனுக்கு நிலையான குமாரனாக பூவுலகத்தார் புகழும்படியாக வந்தான், அவன் யாரோவென்னில் நசரை மூதூர் நாயகனென்க. (43)

## வஞ்சி விருத்தம்.

நசரைப்பதி நாயகனைத்தினமும்
நிசவுற்பன மாகநினைத்தவனற்
றசகற்பனை தன்னிணடந்தவர்வா
னசனத்தை யருந்துசுகம் பெறுவார்.

(இ-ள்) நசரைப்பதி நாயகனைத் தினமும் மெய்யான நினைவாக நினைத்து அவன் நல்ல பத்துக் கற்பனையில் நடந்தவர்கள் வானுலகத்தின் போசனத்தை அருந்தும் சுகம் பெருவாரென்க. (44)

## வஞ்சித்துறை.

வாரிக்கடனிகர், பூரித்தரவல
னேரினசரையி, னூரினமலனே.

(இ-ள்) நீர்க்கடல் நிகராய் செல்வம் தர வல்லவன் இணையில்லாத நசரை ஊரிலிருக்கும் கடவுளென்க. (45)

## கழிநெடில் விருத்தம்.

அமலம்பரந்த கலைமுகமு மாம்பனிகருந் தேன்வாயும்
அருளார்கண்ணீ லோற்பலமு மமைவிற்புருவும் பிறைநுதலும்
சிமிலம்பரந்த திண்புயமுந் தெருளாரருளின் றெரியன்மிகத்
தேக்கவுறைந்த மணிமார்புந் திருவெண்மலரின் மேனியதுங்
கமலம்பரந்த பொற்றாளுங் காண்டற்கரிய கவின் கொண்டு
கனகநசரைப் புரிதன்னிற் கனிவாயிருக்குங் காவலனை
விமலம்பரந்து நான்வாழ்க விழியாலின்று காண்பேனால்
விண்வேறுண்டோ வெனக்கிதுதான் மேலாநயமு நிறைதடமே.

(இ-ள்) அழகு உலாவிய சந்திரமுகமும், தேன்பொழியும் ஆம்பல்பூ நிகரும்வாயும், அருள்நிறைந்த கரும் குவளைக்கண்ணும், வில்லொத்த புருவமும், பிறைபோல் வளர்ந்தநெற்றியும், மலையொடொத்த வலியதோளும், தெளிவுள்ள அருள்மாலை அதிக நிறைவாய் உறைந்த மணிமார்பும், வெண்டாமரையொத்த திருமேனியும், தாமரைமலரொத்த பொற்பாதமும், காணரிய அழகைக் கொண்டு பொன்னசரையில் அன்பாயிருக்கும் அரசனை, நான் மாசற்று வாழ்க என் கண்ணால் இன்று காண்பேனாகில் மோட்சம் வேறுண்டோ எனக்கிதுதான் மேலான நன்மை நிறையும் பெருமை யென்க. (46)

## தாழிசை.

தட-முண்முண்டகங்களே மடலுண்முண்டகங்களே
தளிரின்பலனிசோலையே களிறின் பொலிவுமாலையே

யடர்புகுண்டிலிருணமே தடமுவர்த்தவருணமே
யறலுறைந்த பாரியே யறலுறைந்தவாரியே
கடலிலூருசங்கமே யடலிலாருவங்கமே
கரையிலோடு மலவனே விரைவிலோடுமலவனே
இடரெனக்கிம் முறைமெலாந் திடமுமக்கிங்கறையலாம்
ஏவுநசரைமன்னன்மே லாவிநசையையுன்னலே.

(இ-ள்) வழியிலுள்ள முள்ளுச்செடிகளே, மடலுள்ள தாழைகளே, தழைநிறைந்த கோங்குமரச் சோலையே, மதயானையினும் இருண்ட அந்திநேரமே, நெருங்கிய பாத்தியுள்ள உப்பளமே, குளத்திலுள்ள உவர்த்தண்ணீரே, கருமணலுறைந்த கடற்கரையே, தண்ணீர் உறைந்த சமுத்திரமே, கடலில் ஊருகின்ற சங்கே, அலையோடு பொருந்திய கப்பலே, கரையிலோடும் நண்டே, தீவிரமாய் ஓடும் சந்திரனே, எனக்குள்ள துன்பத்தின் முறைமையெல்லாம் உண்மையாய் உமக்கு இங்கே சொல்லலாம். என் வருத்தமானது நசரை நாயகன்மேல் என் ஆத்துமம் ஆசையைக்கொண்டு நினைத்திருக்கிறதென்க. (47)

## பாணன்-மட்டவிருத்தம்.

உன்னரும் பொருளினை யுன்னி யும்பர்கள்
பன்னரும் புகழ்நிதம் பாடிப் பார்த்திய
மின்னரு நசரையின் வேந்தே பாணனே
மன்னரும் பயனுற மகிழ்ந்து பாடுவாய்.

(இ-ள்) நினைக்கரும் பொருளை நினைத்து வானவர்கள் சொல்லரும் புகழ்ச்சியை நித்தம்பாடி வணங்கிய அரிய ஒளியுள்ள நசரைக்கிறைவனே, பாணனே நிலையான பயன் பெறும்படியாய் மகிழ்ந்து பாடுவாயென்க. (48)

## நிலைமண்டில வாசிரியப்பா.

பாடுறு கொடுமைசைப் பாரிடம்விடுத்து
சூடுறு நரகச் சோகினை வென்று
வீடுறீஇ நானும் விழைவதெக் காலமோ
நீடுறு நசரையி னிலையுள்ள வள்ளலே.

(இ-ள்) கேடுள்ள கொடிய துன்ப உலகத்தைவிட்டு தீ நரக பிசாசைவென்று பரமவீட்டில் சேர்ந்து நானும் ஆசையோடிருப்பதெக்காலமோ? எக்காலமும் நிலையாயிருக்கும் நசரையின் வள்ளலே யென்க (வள்ளலென்பது மட்டில்லாமல் கொடுப்பவனுமென்றறிக.) (49)

## கலித்துறை.

வள்ளலுறை யுந்திரு நசராபுரி மாணினியா
ருள்ளினுறை கற்பணிக்கு நிகரிலவொண் முகத்தைத்
தெள்ளலுறை யினன்காணப் பொறுமையிற் றேய்வன்கண்க
ளுள்ளணிக்கம் புகயறாணிநீரி லொளித் தனவே.

(இ-ள்) வள்ளலிருக்கும் திருநசரைமாபுரியில் வாழும் மாதர் உள்ளத்திலுள்ள கற்பழகுக்கு ஒருபொருளும் நிகரில்லை விளங்கிய அவர் முகத்தை தெளிந்த தண் கதிருள்ள சந்திரன் பார்க்க பொறுமையினால் தேய்கின்றனன், அவர்களுக்குள்ள அழகைப் பார்க்கமாட்டாமல் அம்புகள் அப்புறாதூணியிலும் மீன்கள் தண்ணீரிலும் ஒளித்திருப்பவாமென்க. (50)

## விருத்தம்.

ஒளிமிகுமுகத்தான் களிமிகுமகத்தா னுயருலகத்தான் செயிருலகிற்று, னளிநிழற்குடையா னளிநிழற்கொடையா னுதரவுள்ளான் போதரவுள்ளான், றுளிநிகர்கரத்தா னளிநிகர்வரத்தான் சுந்தரவுருவான் மந்திரத்திருவா, னளிக்கடனயத்தா னளித்துவனயத்தா னசரையின்வேதன சலநன்னுகன்.

(இ-ள்) ஒளிமிகுந்த முகமுள்ளான், களிப்பு மிகுந்த மனமுள்ளான், வானுலகத்தான், உலகின் பாவத்தை அறுத்தவன், குளிர்ந்த அருட்குடையான், அன்பும், செல்வமும் கொடையாய் அளிப்பவன், ஆதரவுள்ளான், திருத்தியுள்ளான், மழைத்துளி போல் நலம்பொழியும் கையான், தேனிகர் வரமுள்ளவன், அழகிய மேனியானவன், திருமந்திரமானவன், அகன்ற கடல்போல்

நன்மையுள்ளவன், மாட்சிமை நிலையானவன், நல்லவன், நசரையின் வேதன் அசையாமலையோடொத்த நாயகனெனக. (51)

## அகவல்.

நன்னற வுமிழ்ந்த நறைமலர்ச் சோலையில்
அன்னியம்பாட வழகிய சிகண்ட
மயிலினமாட வண்டியா ழியம்பப்
பயிலிடப்பூவைபற் பறவையொத் திசைப்ப
மருவிய வணிசூழ் வளம்பெறுநசரையிற்
றிருவிய னிலகுந் தேசுறுநாதன்
விண்மீதபிநவம் வேய்ந்திட வுதித்த
தண்மீன் றனக்குத் தகைவிருதணிந்தோன்
வெற்றிவாகை விளங்கிய கரத்தான்
பெற்றிவாய்மை பெருகிய நலத்தான்
வானவர்கோனவர் வையகத்துள்ள
மானவர்பல்லுயிர் வணங்கியபதத்தான்
அளியருண்மாலை யணிந்திடுமார்ப
னொளியுளமேக முயர்வாகனத்தான்
மண்ணுயிர்துன்ப மாறிவாழ்ந்துய்யத்
தன்னுயிரளித்த சச்சிதாநந்தனை
என்றுளத் தகத்தி லினிநீர்
நன்றணியணியவே நாடுமின்பலையே.

(இ-ள்) நல்லதேன் உமிழ்ந்த வாசமலர்ச் சோலையில் குயில்கள் பாடவும், அழகு தோகையை வீசும் மயிலினம் ஆடவும், வண்டினங்கள் வீணை வாசிக்கவும், நாகணவாய்ப்புள்ளு பதம் சொல்லிப்பாடவும், பல பறவைகள் இவைக்கு ஒத்து, இசைகள் பாடவும், இவ்வகை அலங்காரம் சேர்ந்த சோலைசூழ் வளமை பெற்ற நசரைமாபுரியில் செல்வப்பெருமை இலங்கும்படி அமைத்த அழகிய நாயகன், ஆகாயத்தில் புதிதாய் உதித்த குளிர்ந்த நட்சத்திரத்தை தனக்கு பெருமையுள்ள விருதாய் அணிந்தவன்,

மாருத வெற்றிக்கொடியை விளங்கிய கையில் தரித்தவன், நற்குண உயர்ச்சியில் பெருகிய நலத்தான், வானவர் அரசர் பூவுலகத்திலுள்ள மனிதர் மற்ற பலசராசரங்களும் வணங்கிய பாதம் உடைத்தானவன், மதுமிகர் அருள்மாலையை அணிந்த மார்பன், மின்னொளியுள்ள வுயர்மேக வாகனத்தான், மனிதர் ஆத்துமப் பிணி நீங்கி வாழ்ந்து பிழைக்க தன்னுயிரைத் தந்த கடவுளை என்றும் இனிமேல் உங்கள் மனதினில் நன்மைமாலையாக அணிந்துகொள்ளத் தேடுங்கள் அந்த இன்ப சமுத்திரத்தையென்க. (52)

## விருத்தம்.

அலையுவரற்றிடவும் அலைகளமர்த்திடவு மருணனிலைத்திடவும் வருணமொளித்திடவுங், கலைமறைவுற்றிடவும் பகலிரவொத்திடவுங் கங்குலிலேயிரவி கண்டிடநின்றதுவு, மலையிலுயிர்த்தருளு மகிழ்நசரைத்தலைவன் வரமுளர்செய்வார்மன் வலியுளவற்புதமோ, கலையுயர்கர்த்தனையே கருதியிறைஞ்சுவிரேற் கனமுமியற்றியுநீர் கதியொளிமுற்றடைவீர்.

(இ-ள்) கடல் நீர் வற்றிப்போகவும், அலைகள் எழும்பாமல் அமர்த்திப்போடவும், சூரியன் நடையின்றி நிலையாக நிற்கவும், சந்திரன் மறைவாகவும், பகல் இரவோடு ஒத்திருக்கவும், இரவிலே சூரியன் காண நின்றதுவும், பெத்திலேய மென்னும்மலையில் பிறந்த மகிழ்ச்சியான நசரைநாயகன் வரம்பெற்றவர் இவையெல்லாம் செய்வார். இவைகள் அதிக பலனுள்ள அதிசயமோ! கல்வியினால் அளவில் எட்டாதுயர்ந்த கர்த்தனை நீங்கள் நினைத்து ஏகமனமாய் வணங்குவீராகில் சொன்ன விதங்களில் அதிகமாய் நீங்களுஞ் செய்து ஒளியானந்த மோட்சத்தை முற்றும் அடைவீர்களென்க. (53)

## விருத்தம்.

அடைந்தவருட்டிரு வாசகமே அழிவிலபெருறை வாச கமே, மிடைந்தநலங்கொளு மாதிரமே மேதினியோர்நிலை மாதிரமே, உடைந்தவுளைத் தருமாதரமே யுண்மைவரந்தரு மாதரமே, முடைந்துவணங்கிய தேசிகனே முன்னசரைப்புரி தேசிகனே.

(இ-ள்) நான் அடைந்த அருளின் திருவாசகமே, அழியாப்பெருமை நிறைந்த வாசனையே, மிடைந்த நன்மையைக் கொண்ட பரமகதியே, பூவுலகத்தோர் நிலைத்திருக்கும் மலையே, தளர்ந்த மனதுக்கு ஆதரவே, மெய்யான வரத்தை தரும் ஆசையே, நினைத்து வணங்கிய உபாத்தியே, பழமையாகிய நசரைமாபுரிகுருவே யென்க. (54)

## பஃறொடைவெண்பா.

தேசிலங்கு நன்னசரைத் தேசிகனுமிவ்வுலகின்
காசிடரைமாற்றிக் கனத்தவரம் பொழிந்து
நேசமுடன் மைந்தருக்கு நீதிநிறைசுகிர்தம்
வாசமுறுந் தவத்தின் வாய்மை முறையுறுதி
ஞானந்தயை தாழ்ச்சி நட்புறவு நற்பிரியந்
தானம்பரிவு சமாதானம் பட்சமுடன்
வண்மையிரக்க மனவூக்க நல்லொழுக்க
முண்மைபொறை கற்பு மோங்க வளித்தினிமே
லித்தடத்தி லேநடப்போ ரென்கதியி லென்றோடு
நித்தியமும் வாழ்வார் நிலைத்தென்று-னத்தடத்தை
யுத்திதனி லோயாம லுன்னியியற்றிகதி
உத்தியடைவோ முவந்து.

(இ-ள்) ஒளிவிளங்கும் நன்னசரைக் குருவும் இவ்வுலகின் பாவதுன்பத்தை மாற்றி நிறைந்த வரத்தைப் பொழிந்து, நேசமாய் மனிதருக்கு நீதியும் நிலையும் தருமும் வாசமுள்ள தவத்தின்.

உயர்ச்சியும் நன்முறைமையும் உறுதியும் ஞானம் தயை தாழ்ச்சி சினேகம் உறவு நற்பிரியம் தானம் அன்பு சமாதானம் பட்சம் புகழ்ச்சி இரக்கம் மனத்தைரியம் நல்லொழுக்கம் மெய்மை பொறுமை கற்பும் ஓங்கத்தந்து, இனிமேல் இவ்வழியில் என்னோடு நித்தியகாலம் நிலைத்து வாழ்வாரென்றான். அவ்வழியை புத்தியில் ஓயாமல் நினைத்த கருமங்களைச்செய்து பேரின்ப செல்வத்தை மகிழ்ந்தடைவோமென்க. (55)

## விருத்தம்.

உவப்பாக வெனைத்தேடி வந்தகோவே, யுயர்நசரைப் பதியில் குடி யுறைந்ததேவே, தவப்பேறே யென்னாலே யுனக்கிலாபந் தானுண்டோ வுண்டதெனி லுனையெண்ணும, லவச்சாபா தகங்களா னிந்தைசொல்லி யவமானப் படுத்தியடித் தறைந்து கொன்றே, னவப்பான்மை யாலென்றுன் கருணைதந்தாய், நண்ணியவித் தயைகண்டு நண்புற்றேனே.

(இ-ள்) மகிழ்வாய் என்னைத் தேடிவந்த அரசனே, உயர்ந்த நசரைமாபுரியில் குடியிருக்கும் தேவனே, தவத்தின் பயனே, என்னாலே உனக்கு இலாபமுண்டோ? உண்டு, அஃதென்ன வெனில் உன்னை எண்ணாமல் சாவான பாவங்களால் நிந்தைகளைச் சொல்லி அவமானப்படுத்தி அடித்து சிலுவையில் அறைந்து கொன்றேன், இதுவே உனக்குக் கிடைத்த இலாபம், உனது சினேக குணத்தினால் என்றும் எனக்கு உனது கருணைதந்தாய் உனக்குள்ளே இந்த தயையைக்கண்டு உன்னை சினேகித்தேனென்க. (56)

## தழைக் கலித்துறை.

புத்தியதாகு நற்றோழியேகேள்ப் புரிதழையோ
மத்தியமண்ணோர்க் குயிராங்கனியின் மாத்தழையோ
வத்தியமாம்பவ மீளச்சுமந்த வகத்தழையோ
சத்திநசரைப் பதிவீதழைவில்லை தாணிலையே.

(இ-ள்) புத்தியதாகும் என் நல்லதோழியே, சொல்லக்கேள். இந்த அன்பென்னும் தழையானதுவே நடுவுலகத்தில் உண்டாக்கப்பட்ட ஆதிமாந்தற்கு உயிரைத்தந்த கனியின் மரத்தழை என்பவோ, அல்லது அளவில்லாத பாவத்தை மீட்க ஆண்டவன் தோளில் சுமந்த தழை என்பவோ, விருதுக்கொடியுள்ள நசரைமாபுரி நாயகன் தந்த இத்தழைக்கு விலையில்லையென்க. (57)

## காப்பியக் கலித்துறை.

இலையெனுமன்பி னிலையெனுமெந்த னிடமாகச்
சிலையெபரிமைம்பூக் கணையின்முறிந்தான் செயிரென்று
மலையெரிமங்கிக் கலிவலிபெஞ்சி மறைவானக்
கலையெழினசரை நிலையமுறுங்கோன் கரமாலே.

(இ-ள்) இலை என்னும் பெயராய் அன்பானது என்னிடத்தில் நிலையாய் அமைய, கருப்புவில்லில் தாமரைப்பூ, அசோகம்பூ, மாம்பூ, முல்லைப்பூ, வேளைப்பூ, என்னும் ஐந்தம்பைத் தொடுத்தெய்யும் மன்மதன் முறிந்தோடினான். என் உள்ளத்தில் பாவமானது மலை நிகராய் உயர்ந்து எரிந்த அக்கினி அவியப்பட்டது, வஞ்சகத்தின் பெலன் குறைந்து மறைவாச்சுது, பூரணச்சந்திரன் அழகாயிலங்கிய நசரைமாபுரியின் கோயிலிலிருக்கும் தலைவன் திருக்கரத்தின் வல்லமையாலென்க. (பாவத்தை வெறுத்த கருத்தைக் காண்பிக்கதென்றறிக.) (58)

## சந்த விருத்தம்.

கரவாகிடுமென் கறையானதுவே
பரிவாகிடுமின் பரிவானலமே
விரவாகிடுமென் வியன்மாநசரை
வரவாகிடுமென் வளமேலிடவே.

(இ-ள்) என் பாவம் என்னை விட்டொளித்துப் போகுமே, ஒளிபரவிய நலம் என்னோடே ஏகரித்திருக்குமே, பெருமைநிறைந்த நசரைக்கிறைபவன் என்னிடத்தில் வருவான், எனக்கு இன்பமும் அழகையும் தரவேயென்க. (59)

விருத்தம்.

மேவியநன்மை விளைந்தருடாதைக்
கேவியன்முற்பிணை யீந்தமுறைக்காய்ப்
பூவிலுதித்தணி பொன்னசரைத்தா
ஞவியளித்தன ஞவிதனக்கே.

(இ-ள்) விரும்பிய நன்மையெல்லாம் விளைந்திருக்கும் பிதாவாகிய சருவேசுரனுக்கு இயல்பாய்த்தான் முன்பிணை கொடுத்த முறைமைக்காக பூவுலகத்தில் உதித்த அழகிய பொன்னசரைத்தானாகிய கடவுள் தன்னுயிரைக் கொடுத்தார் மனுவுயிருக்கென்க. (60)

விருத்தம்.

தனத்திடத்தினிற் குயிற்றிய தகைமணிபோன்றே
மனத்திடத்தயை வதிந்திடு நசரையின் வள்ளல்
சினத்திடுங் கொடும் வெறிகளைச் சிதைந்து நன்னயனைக்
கனத்தினீரெனப் பொழிந்தனன் காசினியோங்க.

(இ-ள்) பொன்னில் பதிக்கும் அழகிய மாணிக்கத்தைப் போல, மனதினில் தயை குடிகொண்ட நசரையின் வள்ளல், முனிவுள்ள கொடிய பேய்களைக் கெடுத்தழித்து, நன்மைகளை மேகம் பொழியும் நீர்போல பொழிந்தான் பூவுலக முயற்சியாக வென்க. (61)

மறம்கழி-நெடில்

ஒங்கறிரு முகங்கொணர்ந்த தூதாசெந்தீ யுடனுக்கோ மற வரிளம் பிடியைக்கேட்டா, யீங்கயமோ விருமருப்புங் கையு மெங்கே யிந்தவிளம் பிடிக்குமுகத் தொருகைவாலும், பாங்க கன்ற விருசெவியு நாற்காலில்லைப் பாசடையார் வனஞ்சிலம்பிற் பார்த்தாலுண்டாங், தீங்கறுநன் னசரைப்பதி யானுந்தேவன் றிருத்தயையி னில்லைமைபெற்ற திறத்தோராமே.

(இ-ள்) அரசன் திருமுகம் கொண்டுவந்த தூதனே, அவன் திருமுகத்தை இங்கு கொண்டுவந்து வைத்தாயாகில் அங்கிருக்கும் உயிரில்லா பிரேதத்துக்கோ மறவர் பெண்ணைக்கேட்டாய் இப்படி நீ கேட்டதல்ல, ஓங்கலன்பது யானைக்கும், இளம்பிடி என்பது பெண்யானைக்கும் பயனுகையில் அரசன் தன்யானைக்கு ஒரு பெண்யானையை தேடச்சொன்னால் நீ அதின்பயனறியாமல் இங்கு கேட்கவந்தாய், அப்படித்தான் இது, யானைமுகமென்றால் இம்முகத்தில்இரண்டுகொம்பும் துதிக்கையுமெங்கே? எங்கள் பெண்ணுக்கு முகத்தில் ஒருதுதிக்கையும் வாலும் இருபக்கமும் அகன்றஇருகாதும் நாலுகாலுமில்லை, பச்சிலை நிறைந்த வனந்தரத்திலும் மலையிலும் போய்ப்பார்த்தால் அகப்படும், நாங்கள் குற்றமில்லாத நன்னசரைமாபுரியை ஆளும் தேவன்திருத்தயையின் பெருமைபெற்ற திறமையுள்ளவராம் என்று அறிவாயென்க (திருமுகமென்பது கடிதமென்றறிக) (62)

தாழிசை.

திறம்படித்து வந்துவார்த்தை செப்புகின்ற தூதனே, செத்தவோலை தனையெடுத்துச் சிற்றிரும்புகொண்டிரு, புறம்வகுத்து சிரமும்பின்னும் போக்கிக் கூரிரும்பினுற், பொறித்தலாகக் கீறிவைத்த புனையும் வளையஞ்செல்லுமோ, மறம்பிடித்த வரசர்மறவர் மங்கைமீதுமாலினுல், மாண்டுநிரையம் வாசலரசுமரமதாக நிற்கிறு, ரறம்பலிக்கு நசரைநாத னலருமம்புயத்திணை, யடியினடிமை யாளரென் றறிந்திலாது கேட்பையோ.

(இ-ள்) திறமையாய்ப்பேசக் கற்றுக்கொண்டுவந்து வார்த்தை பேசுகின்றதூதனேகேள், செத்தவோலையைஎடுத்து ஒருசின்ன இரும்பைக்கொண்டு இருபுறமும் வகிர்ந்து, தலையும் பின்னும் தறித்து, கூரிரும்பினுல் புள்ளிப் பொறியாகக் கீறிவைத்துக் கட்டியவளையம் இங்கே செல்லுமோ, பாவத்தில் பிடிப்பாயிருந்த அரசர், பெண்ணின் மீது ஆசையாயிருந்து செத்து, நரகவாசலில் அவர்கள் அரசு மரமாய்க்கிடந்து வேகிறுர்கள். தருமப்பயனுக நசரைநாதன் மலர்ந்த தாமரையிணை பாதத்தினடிமையாளரென்று அறியாமல் கேட்பாயோவென்க (63)

## விருத்தம்.

கேழ்வாயின் பொற்கதவங் கெழுமைபெறு மாநசரைக் கேழ்வனல்ல, பேழ்வாகும் பிழிமலர்த்தாள் பெட்புறவே சிரத்திலணிபெற்றியார்கள், தாழ்வான குலமெனினு மருவருப்பாம் பிணியெய்தித் தளர்வரேனும், வாழ்வான வானுலகின் வானவரொத் திருக்குமுயர் மாண்புள்ளாரே.

(இ-ள்) ஒளிவாசலின் பொற்கதவினால் அழகுபெற்றிலங்கிய நசரைமாபுரித் தலைவன் நல்லபெருமையும், வடிவமுமுள்ள தேன்பொழியும் மலர்ப்பாதத்தையும் ஆசையோடு தலையில் அணிந்து கொண்ட நற்குணத்தார் தாழ்வானகுலமென்றாலும், அருவருப்பான நோயுண்டாகித் தளர்வாரே யாயினும் வாழ்வான வானுலகத்தில் வானவரோடு ஒத்திருந்து வாழும் உயர்ந்த பெருமை யுள்ளாரென்க (64)

## விருத்தம்.

புள்ளார்ந்துவக்கு மிருணிழற்காப் பொலிமாநசரைக்குடி மேவுந், தெள்ளாமறையின் வடிவான திருவாலயமுன்வாவியினிற், கள்ளார்கமலங் கடியாம்பற் கடவுடாய்கண் டிருபொழுதுந், தள்ளாமலரு மவளணிந்த பன்னவிதுவுள் ளொளிக்கென்றே.

(இ-ள்) பட்சிசாதிகள் இருந்துகளிக்கும் இருணிழல்சோலையைச் சேர்ந்த நசரைமாபுரியில், குடியிருக்கும் தெளிந்தவேதவடிவானகிய கடவுளின் திரு ஆலயத்தின் முன்னிருக்கும் குளத்தில், தேன்நிறைந்த தாமரையும் வாசமுள்ள ஆம்பலும்மிக, கடவுள்தாயான கன்னிமரியும் கோயிலில் இருப்பதைக்கண்டு, இரவுபகலென்றும் இருபொழுதும் தள்ளாமல் மலரும், அளவணிந்த சூரியனும் சந்திரனொளிக்காயென்று மென்க. (தாமரைக்குச் சந்திரனும், ஆம்பலுக்குச் சூரியனுமாகாமல் கூம்புமென்பதால் இவ்விடத்தில் அவ்விரோதமின்றி மலருமென்பதாமென்க) (56)

## குறம்-தாழிசை.

என்றுமுனக்கொரு துன்பமுமெய்தில மெய்சொல்வேனம் மையே, என்றன் மகன்றலைக்கெண்ணைவா ரிடையனுமென்ற னக்கொன்றளி, நன்றதுளத்திற நன்றதாய் கண்டன முகக்குறி தன்னிலே, நன்றணிமின் னசரைப்பதி நாதனை நாடியநம்பலே.

(இ-ள்) எப்பொழுதும் உனக்கு ஒரு துன்பமும் வாராத மெய்யைச் சொல்வேன். அம்மையே, என்மகன் தலைக்கு எண்ணை வார், எனக்கு ஒரு பழம்பிடவை கொடு, உன் மனதிலுள்ள விசாரத்தை நன்றாய் உன் முகக்குறியில் கண்டேன். அதென்ன வெனில் நன்மை ஆபரணத்தைத் தரித்த ஒளிநசரைமாபுரி நாய கனைத் தேடிய பேராசையா மென்க. (66)

## விருத்தம்.

நம்புன்மிக வுங்கொண்டக நலிவெய்துயிர் மின்னே நாளைக் குன தன்பாகிய நசரைப்பதி நாத, னும்பர்க்குழு வும்பின்னுற வொளிதேர் மிசைவந்தின் புறவாடியிருப்பானீ யொருமித்துயர் வாழ்வாய், வம்பற்புகழ் மல்கத்திரு மன்றற்புரிவானீ மருவித் துவ மகிழ்சற்பிர சாதக்கருவாவாய் நம்பிக்கொளு மென்வாசக நல்குமிதுநியமே நடவாதெனிற் குறிநான்சொல நாடெங்கினு நாடேன்.

(இ-ள்) ஆசைப் பெருக்கங்கொண்டு மனமடிவாகிய ஆத்து மம் என்னும் பெண்ணே! நாளைக்கு உனது அன்பாகிய நசரை மாபுரி நாயகனை, வானோர் கூட்டங்கள் பின் சூழ்ந்துவர கதிரொ ளித்தேர் ஏறிவந்து இன்பமாய் உறவாடியிருப்பான், நீ அவனோடு ஒருமித்து உயிர் வாழ்வாய், எண்டிசையும் புகழுண்டாக உன் னைத் திருமணம் செய்வான், நீ அவன் நன்மையில் சேர்ந்து நிலை யான மகிழ்ச்சிகொண்டு தேவ சற்பிரசாதக் கருவாவாய், இதை நம்பிக்கொள், என் சொற்படி உண்டாகும், இது நிச்சயந்தானே நான் சொன்னபடி நடவாவிட்டால் இனிமேல் யான் குறிசொல்ல ஒரு நாடெங்கிலும் நாடேனென்று ளென்க. (67)

## வஞ்சிப்பா.

நாடுநன்னிலைநன்கது நீடுநல் கருணீழலும்
பாரோர்க்கதிபகிர்ந்தளிப்ப நேராகியநெடுந்தருவார்
கான்வீசிய கடியலரிற் றேன்வீசிய சினைநிழற்று
நயமேவிய நசரைத்திரு வியன்மாநக ரெய்தினனே
யெய்தியபின் றீதார்வன்றுயர்தேயப் பொன்னிணைப்பாதாம்
போருகப்பண்பாய்நானே, மருவியென்னிருவிழி மலரினிற்பூண்
டாற் றெருடருமொளிவுறுந்தின்ற மருதருமமுதமு மாறவின்
பமே.

(இ-ள்) தேடும் சுக நன்மையும், விரிவாம் தயை நிழலும், பூவுலகத்தார்க்கு அதிகமாய்ப்பங்கிட்டுக்கொடுக்க ஒழுங்காய்நீண்டமரம் நிறைந்த சோலையின் வாசம் வீச, மலரில் தேன் தரும் கொம்புகளால் நிழலைச்செய்யும் நன்மை பொருந்திய நசரை என்னும் செல்வ மானகரில் சேர்ந்தனனே, சேர்ந்தபின்னர் பாவ மிகுதியால் விளைந்த பலத்ததுன்பம்தேய, அவனிணைப் பொற்றாமரைப் பாதத்தை நற்குணம் பெற நானே சேர்ந்து, என் இருகண்மலரில் பூண்டுகொண்டால் தெளிவுதரு மொளியுண்டாம், அப்பாதத்தில் அருந்திய வாசமுள்ள தேவஉணவு மாறாத இன்பமாமென்க. (68)

## ஊசல்.

இன்பமெனவுலகசுகந் தன்னைத்தேடி யெந்நாளுமலையுமனத் திகழ்வுண்டாக, வன்புநிலைக்கம்பமா யசையாநாட்டி யரியமறை விட்டமா யிணைத்துக்கட்டிப், பின்பு நலமுறமை யெல்லாங் கயிறுய்ச்சேர்த்துப் பேறமே பலகையாய்ப் பெயராப்பூட்டித் துன் பறவே நசரைமன்னு வாடிரூசல் தொல்லுலகோர் கதியுறவே யாடிரூசல்.

(இ-ள்) இன்பமென்று உலகைத் தேடி எந்நாளும் அலையப்பட்ட மனம் மகிழ்ச்சியாகும்படியாய், உன்தயை நிலையான கம்பமாய் அசையாமல் நாட்டி அரிதான மெய்வேதத்தை மேல் விட்டமாய் சேர்த்துக் கட்டியபின், நன்முறைமை யெல்லாம் கயிறாய்ச்

சேர்த்துப் பிணித்து, பேரறமாகிய இல்லறம் துறவறமென்னும் ஈரறங்களையும ஒன்றுபட ஒரு பலகையாய் அசையாமல் சேர்தது க்கட்டி துன்பமற, நசரை நாயகனே ஆடிரூசல், பூவுலகத்தோர் பரமகதி சேர ஆடிரூசலென்க (69)

## சந்த-விருத்தம்.

ஊசலுறுத்தியமோ காசையொழித்திடுவா ரொண்டரளத் திணையா நன்றணியேயணிவார், பாசமுறுத்தியமா காசையகற்றிடு வர்ர் பண்புதொகுத்தவரே நண்புளமுற்று றுவா, ராசமுறுக்கியநீ ராவிகுடைந்திடுவா ரம்மனைபந்துகழங் காடியவங்கணையார், காச முறுந்திகழார் தேசுறுநன்னசரை காவலனன்பினிய வாவன்மிகு த்தவரே.

(இ-ள்) மனதைத்தூண்டி அசைக்கும் மோக ஆசையை ஒழித்திடுவார், விளங்கிய முத்துக்கு இணையான நன்மையின் ஆபர ணத்தை அணிந்து கொள்வார், பிசாசு வருத்திய பெரும் பாவங் களைத் தள்ளிப்போடுவார், நற்குணச் சேர்க்கையான சினேகத் துடன் சினேகித்த சினேகத்தை மனதில் முற்றும் கொண்டிருப் பார், நகைத்து களிப்பாய் நீர்க்குளத்தில் குளித்து விளையாடுவார், பூப்பந்தால் அம்மானை ஆடிக் கொண்டிருக்கும் மாதர்கள், பொன் னுல் விளங்கும் அழகிய நன்னசரைமாபுரி அரசன் தயையின், இன்பத்தின் ஆவலில் மிகுந்திருப்பார் இவரென்க. (70)

## விருத்தம்

மிகுத்த தயைநறை யுகைத்த விடவுள மிழற்ற நசரையினு தனு, மிகுத்த இறுமவ ரகத்தினுறுமென வகுத்த மொழிதவறு மலே, யுகுத்திவரமழை யுவப்பவெய்தினன் றெகுத்த நலமுறை யீந்தனன், பகுத்தநலமுறி முதைத்த வுயிர்மகள் பயிற்ற விவருற வாடினுர்.

(இ-ள்) மிகுத்த தயையின் தேனைச் செலுத்தி உள்ளத்தில் உரைக்கும் நசரை நாயகன், தன்னை அழைத்தவரிடத்தில் வருவேனென்று சொன்ன சொல்தவறாமல் வரமழை பொழிந்து மகிழ்வாய் வந்து சேர்ந்தான். அவ்வாத்துமத்துக்குச் சேர்க்கையான நன்முறைமை எல்லாம் தந்தான், அந்த நன்மையைக் கொண்டு மகிழ்ந்த ஆத்துமம் என்னும் பெண் அவனோடு பேச, இவரிருவரும் உறவாடினாரென்க. (71)

விருத்தம்.

உறவாடியெய்தி யெனையாளுகின்ற வொளியே விளங்கு நசரை, யறவாழியேநல் லருளாழியேயென் னகமீதுறைந்த வடிவே, நறவாகுமின்ப முகியாதருந்தி நளிராவிகொண்ட தினிமேற் றிறவாவலான தொழியாதெந்நாளுந் திருவுஞ்சுகந்த மருவே.

(இ-ள்) வந்து உறவாடி என்னை ஆளுகின்ற ஒளியே விளங்கு நசரையிலிருக்கும் தருமக்கடலே, நற்றயைக் கடலே, என்னிடத்திலுறைந்த வடிவே, அந்த இன்பத்தேனை முகியாமல் அருந்தி குளிர்ச்சி கொண்டது என் ஆத்துமம். இனிமேல் இந்த உற்சாகமான ஆவலும், செல்வமும், திவ்வியசுகந்த வாசமும் எந்நாளும் என்னை விட்டு நீங்காதென்க. (72)

தென்றல்-விருத்தம்.

மருவலர்முன் னுகைத்தியதீ வினைத்தீயில் பாழ்கினேன் மனதின்மிக்கப், பொருவரிய மம்மரெரி புணர்ந்திருந்தேன் றென்றலே பூரிப்பாகத், திருவருள்கொண் டெனையாளு நசரைமன்னனென்னிடத்திற் சேர்ந்ததாலே, மருவலரின் மணங்கொண்டு வந்தாய்பே ரின்பமுள்ள வசந்தமாமே.

(இ-ள்) பகைவர் முன் எனக்குச் செலுத்திய தீவினைத் தீயில் மயங்கிப் நான் மனதில் மிகவும் ஒப்பரிய துன்ப நெருப்பு பற்றியிருந்தேன். தென்றல் காற்று இப்போது பூரிப்பாக திருவருள் கொண்டு என்னை ஆளும் நசரைநாயகன் துன்பத் தீயை

அளித்து, என்னிடத்தில் வந்து சேர்ந்தகாலே நான் களிப்பாயிருக்கும் இவ்வேளையில் வாசமலர் மணத்தைக் கொண்டு வீசிவந்தாய், நீ பேரின்பமுள்ளதென்றலாமென்க. (73)

## விருத்தம்.

வசுக்கானற் சுரந்தனிலே வனசம் பூத்தது போலும்
நிசிக்கு குவற்றிடப் பௌவ நிலவு தோன்றிய போலும்
வசுக்காந்தி நசரையன்னு மாசகற்றி யெனதாவிப்
பசிக்கான வமுதமுமாய்ப் பரிவுடன்வந் தமைந்தனையே.

(இ-ள்) நெருப்பும் கானலும் குடியாயிருக்கும் பாலை நிலத்தில் தாமரை பூத்தது போலவும், அமாவாசை இராவிருளில் பவுரணை நிலவு தோன்றினது போலவும், பொன்னொளி விளங்கிய நசரை நாயகனே என் பாவ அந்த காரத்தைப் போக்கி என் ஆத்துமம் பசிக்கான தேவ போஜனமாய் அன்புடன் வந்து அமைந்தாயே யென்க. (74)

## கலித்துறை.

அமையமறிந்து மிகவாயிரங்கு மருளுருவா
னிமையவர் போற்று நசரைத்தலைவனு மென்றனக்கே
யிமையமுறுஞ் சற்பிர சாதமென்னு மிபைக்கருவை
யமைய வமைத்தனனென் னுயிபேரின்ப மாகிடவே.

(இ-ள்) காலம் அறிந்து மிகவாய் இரங்கும் அருளுருவானவன், வானவர் போற்றும் நசரை நாயக னென்றனக்கே ஒளியுள்ள தேவ சற்பிரசாதமென்னும் கருப்பம் உண்டாகச் செய்தாய், என் ஆத்துமம் பேரின்பமாகவேயென்க. (75)

## விருத்தம்.

ஆகமற்றவன காரியனந்த ரணப்பொருளென் னுயிபளிக்க,
ஆகமுற்றபுவி மீதினிலேதா னுருவெடுத்தநசரைத்திருவெங்கை,
யேகமுற்றுமிக நானவனின்பா யேகரித்துசுக மாகவிருக்கத்,
தாகமுற்றபடி யாகவெனக்குத் தந்தநல்லதிரு வானதைவாரி.

(இ-ள்) சரீரம் இல்லாதவன், மெய்க் கடவுளானவன் அளவில்லாதவன், வேதப்பொருளானவன், என் ஆத்துமத்தை இரட்சிக்க சித்தமாய் உலகத்தில் தான் மனுவுருவெடுத்த நசரைச் செல்வ அரசனை, தனிமையில் நானும் அவனும் ஏகரித்து ஒன்றுயிருக்கத்தக்கதாய் நான் ஆசைப்பட்டபடி எனக்கு நல்ல செல்வத்தை வாரித்தந்தானென்க. (76)

## விருத்தம்.

வாரீர்புவனத் துள்ளோரே வடிவமிலங்கு நசரைமன்னனைப்,
பாரீருமது கரங்கூப்பிப் பணிவீர்பணிந்து பனிமலர்த்தாட்,
சேரீருமது குறைகளெல்லாஞ் செப்பியினிச்செய் யோமென்று, சாரீரவன்றன் னருண்மலைமேற் றளர்வில்லாமல் வாழ்வீரே.

(இ-ள்) வாருங்கள் பூவுலகத்திலுள்ளோரே, வடிவமிலங்கிய நசரைக் கரசனைப் பாருங்கள், உமது திருக்கைகளை கூப்பிப் பணியுங்கள், பணிந்து குளிர்ந்த மலர்ப்பாதத்தில் சேருங்கள், உமது குற்றங்களைச் சொல்லி இனி செய்வதில்லையென்று சாருங்கள், அவன் அருள்மலைமேல் தளர்வில்லாமல் வாழ்வீரென்க (77)

## வெண்கூவெண்பா.

வாழ்வான தென்னசரை மன்னனைப் போற்றினர்க
டாழ்வில்லா தோங்குவார் தாரணியிற்-கேழ்விதப்பும்
விண்ணுலக வின்பநல வேட்டலுண்டு வில்லொளியைக்
கண்ணிரண்டாற் காண்பார் களித்து.

(இ-ள்) வாழ்வான அழகிய நசரை நாயகனைப் போற்றினவர் தாழ்வில்லாமல் உயர்ச்சியாவார், இவ்வுலகத்தில் இதுவுமன்றி ஒளிமிகுந்த வானுலக இன்ப நன்மையை விருப்பமாய் அருந்திய கதிர் பிரபையை இரண்டு கண்களால் காண்பார் களித்தென்க.(78)

180660.



## விருத்தம்

களித்ததினத்தில் வருந்தென்றற் காலேமணந்தோய் மலரினமே, விளித்தமழவுக் குயிலினமே விரிபைஞ்சிறகின் கிளியினமே, துளித்ததேமாங் கனியினமே தூயநசரை மன்னனென்னை, யளித்தமுறைக்காய்க் கால்மணமு மரும்பாச்சுவையாற் புகழ்வீரே.

(இ-ள்) களிப்புள்ள இளவேனிற்கால நாளில் வரும் தென்றற்காற்றே, இப்பருவத்தில் மலரும் மணமிகுமலர்களே, ஆண்டவனை அழைத்த இளங்குயில்களே, விரிந்த பசும் சிறகுள்ள கிளிகளே, தேன் துளிக்கும் மாங்கனிகளே, தூய நசரை நாயகன் என்னை இரட்சித்த முறைமைக்காகத் தென்றல் தன் காற்றாலும், புட்பங்கள் தம் மணத்தாலும், குயில்களும் கிளிகளும் தம் குரல் தொனிப் பாவாலும், மாங்கனிகள் தம்சுவையாலும் புகழுங்களென்க. (79)

## சந்த-விருத்தம்.

புகலருமறத்தினற் பூவுலகதி புகையெரிகனத்த மாரிபொழியவே, சகலருமழித்து நீறாக்கியபினர் தரணியிலெழுப்பியே மாந்தரையினிய, சகலரைச்சபித்துதீயேவியு நலரனைவரைவிளித்து வானீநசரையிற், றகவுறநிலைத்த கோவேநலரு ன் றகைபெற வெனக்குமாசிதருவையே.

(இ-ள்) சொல்லரிய பாவத்தினால் பூவுலகத்தில் அதிக புகை மண்டி அக்கினிமாரி பொழியவே, மனிதரையும் சகல சராசரங்களையும் அழித்து நீறாக்கினபின்னர் மனிதரை எழுப்பி பாவிகளைச்சபித்து நகரத்தில் தள்ளி நல்லோர் அனைவரையும் அழைத்து பரமகதி கொடுக்கும் நசரையில் உரிமையாய் நிலைத்திருந்த அரசனே, அந்த நல்லவருடன் கூடிப்பெருமை பெற எனக்கு ஆசீர்வாதம் தருவாயென்க. (80)

## தாழிசைக்கலிப்பா.

தருமமுள்ள மந்திரமாந் தகமையுள்ளமந்திரமாந்
திருவரங்களுறைகயமாஞ் சேணங்களுறைகயமா
மருபயஞ்சொற்றலைவனுமாம் வளர்நசரைத்தலைவனுமா
மருகநயந்திருப்பீரே யகமுண்ணயந்திருப்பீரே.

(இ-ள்) தருமமுள்ள மந்திரமாம், அழகுள்ள தேவ கோயி லாம், திருவரங்களுறைந்த குளமாம், மேலான இன்ப முறைந்த பெருமையாம், வாசமுள்ள அமிர்தத்துக்கு இணையான சொல்லு டைய குருவானவனும், வளமை நசரைத்தலைவனுமாம், அவனைக் கிட்டிச்சேர விரும்பியிருப்போரே, உமது உள்ளத்தை பாவத்தை விட்டு நன்மையில் திருப்புவீரென்க. (81)

## விருத்தம்.

திருநயன்றருபாரி செயிரினிசியறுசூரி சிதைவகற்றியமூரி கனமான, வருணயந்தருமாரி யகமுழங்கிடுகாரி யமிர்தமின்புள வாரி யுயர்ஞான, தெருணயந்தருமூரி சேணிலத்துயர்வேரி திட நிறைந்திடுமேரி புவியோர்க்குப், பொருணயந்திடுபூரி புற்கலன் பசிதோரி புகழுநசரையினூரிற் றிகழ்கோனே.

(இ-ள்) திருதரும தேனும், பாவ இருள் அறுக்கும் சூரிய னும், கேடகற்றிய வல்லமையும் அதிகமாக அருள் நன்மையைத் தரும் மேகமும், மனத்துக்கு ஒழுங்கான வழியும் அளவில்லாத இன்பக்கடலும், அறிவுக்கும் ஞானத்துக்கும் தெளிவைத் தரும் பெருமையும், மோட்சசுகந்தமும் மெய்மை நிறைந்த வேரியும், பூவுலகத்தாருக்கு திரவியம் கொடுக்கும் செல்வமும், ஆத்தும பசிக்கு அமுதமும், புகழப்பட்ட நசரையூரில் விளங்கிய அரச னேயென்க. (82)

## வலைச்சி-தாழிசை.

கோளையொத்தவெழி னசரைமாபுரியிற் குலவுமாடமணி வீதியிற், கூடைமீதுநயல் மூடிவைத்துவிலை கூறுகின்ற வலைச்சி

யரேகேள், வாளையுஞ்சுரும்பு நிகருவெங்கணை மறுத்துப்பாரையு மொதுக்குவாய், மடவைகண்டகத்தின் காரையொத்தனவவ் வா லுந்திங்குளுவை யென்றெளி, தெளியொத்தகருங் கூளியானது முள் திருக்கைவெஞ்சினமும் போக்கிடாய்க், தேடிடாதேமுதற் கெண்டைசேலதனைத் தினமுமின்பமோ ராவிரு, வாளியாளுறப் பன்னுவையும்பொறியை யடக்கினன் றவக்கி லுன்னையே, யளித் துநல்ல திருக் கையினுலுயர்த்தி யதிகவான்பொரு ளளிப்பனே.

(இ-ள்) நவக்கிரகத்தில் ஒன்று போல் விளங்கும் அழகிய நசரைமாபுரியில் நிறைந்த மணிமாடமுள்ள வீதியில், கூடையில் கெண்டை மீனை மூடிவைத்து விலை கூறிவருகின்ற வலைச்சியரே கேள், கூர்ந்த வாளையும், வண்டையும் நிகரப்பட்ட கொடியகண்ணை க்கொண்டு பார்க்கும் பார்வையை மறுத்து உலகத்தையும் முன் போற்பற்றுதலில்லாமல் ஒதுக்குவாய், முள்ளுள்ள கடவு மரத்தின் இருளை ஒத்திடும் மற்ற அசுத்தமான குற்றத்தைக் கண்டபோது உன்னைக்கொல்லும் புலியென்றெளி, தெளிமீனுக்கிணையான கருங் கூளிப்பேயும் உன் உள்ளத்துள்ள திருக்கையும் கோபமும் போக்குவாய், அருகில் கெண்டை போட்ட நல்ல சேலையைத் தேடியு டுக்காதே, தினமும் இன்பத்தைத் தெரிந்து உட்கொள்ளா திருப் பாய், ஆளும் இக்கடவுள் உன்னையாளும்படியாய் உன் பல்லைக் காட்டி நகையாமலும், இனியமொழி பேசாமலும், ஐம்பொறியை அடக்கி நன்மையில் மகிழ்சசியாகில் உன்னையே இரட்சித்து நல்ல திருக்கையினுல் எடுத்து உயர்த்தி அதிகமாய் வானுலகின் பொரு ளைத் தருவாரென்க (83)

## விருத்தம்.

அளிகளிமிர்ந் தலர்மீதி லளிகளருந் திடவீழ்காற்
றுளியனதே றல்சிதர்த்தி சொற்பயிர்பாய் பணைசூழு
நளியுளந சரையினுத னறைமலரடி தொழுவீரேல்
வெளியுலக ணியில்வியந்து விண்ணவரொத் திடுவீரே

(இ-ள்) வண்டுகள் ஒலித்து மலர்மீதில் தேன்களை அருந்த மொய்த்து மழைத்துளிபோல் தேன் திரள்சிந்தி நெற்பயிரில் பாயும் வயல் சூழ்ந்து அகன்ற நசரைமாபுரி நாதன் வாசமலர்ப் பாதத்தை தொழுவீராகில் வானுலக அலங்காரத்தைக்கண்டு அதிசயித்து வானவரோடு ஒத்திருப்பீரென்க (84)

## விருத்தம்.

ஒத்தந்தந்த வுண்மையை நம்பாயோ நெஞ்சே
யத்தங்கண் டாறன்முக முள்ளறி வான்போல்
நித்தந்தீக்கண் டஞ்சுதலாய் நன்னிலை கொள்வாய்
வித்தந்தருவா னசரையினா தன் மிதமில்லா.

(இ-ள்) மெய்வேதம் தந்த உண்மையை நம்பாயோ என் நெஞ்சமே, கண்ணாடியைப் பார்த்தவன் தன் முகத்திலுள்ளதைக் கண்டறிவான் போல, நீ நித்தமும் நரகத் தீயைக் கண்டு பயப்பட்டு நன்மையில் நிலைகொள்வாய், உனக்கு வான் திரவியத்தை தருவான் நசரையின் நாதன் அளவில்லாமலென்க. (85)

## மதங்கி-விருத்தம்.

மிதங்களில்லா தநலங்கள் வுதங்கணிகங் கனமீயுந்
ததங்கணியா நசரைத்தா னிதங்கள்மதங் கியர்பாட
மதங்கிமலர் கரமங்கண் வணங்கிலா டிடவோடு
பதங்கிளரின் பநலத்தைப் பணிந்துவிழுந் தணிவீரே.

(இ-ள்) அளவில்லாத பலவித நன்மைகளில் நூறுகோடிக் கதிகம் கொடுக்கும் அளவை இவ்வளவென்று மதிக்கரிய நசரைத் தானாகிய கடவுளின் தேவ உரிமைகளை கன்னிமாதர்கள் பாடவும், மதங்கி என்னும் கன்னிப்பெண் மலர்க்கையால் வணங்குகையில் அசைந்தாடும் கையாட்டத்தோடு பூந்தாது வீசும் மலர்ப் பாதத்தைப் பணிந்து விழுந்து அணிந்துகொள்வாரென்க. (86)

## தாழிசை.

அணிவிளங்கு நசரைநாத னருகிலணிய தாகநின் றருமதங்க
ரிசைகள்பாட வவர்கணாவுமாடவு மணிவிளங்கு மெழின்மதங்கி
வனசபொற் கரங்களும் வணங்கிலாட நெஞ்சமஞ்ச மன்பிலூஞ்
சலாடவுந், துணிவிளங்கு மிதயமாகித் துன்பநீங்கலாயினர்
தொற்பழிக்கு ளுற்றுநித்தந் துயருறைந்த மைந்தரே, பணி
விளங்கு பரிவுகொண்டு பார்த்திறைஞ்சி லுள்ளினோய் பற்றுமற்று
முத்திபெற்று முற்றும் வாழலாகுமே.

(இ-ள்) அழகு இலங்கிய நசரை நாதன் அருகிடத்தில் ஒழுங்காய் நின்று அரிதாய்ப் பாடுவோர் இசைப்பாட்டுப்பாடும் போது அவர்கள் நாவு ஆடவும், மாணிக்க ஒளி அழகுள்ள மதங்கி என்னும் கன்னிப்பெண் பொற்றாமரைக் கைகளும் நாதனை வணங்குகையில் ஆடவும், அவ நெஞ்சமென்னும் மஞ்சத்தில் அன்பிருந்து ஊஞ்சலாடவும் ஒளிவிளங்கும் இருதயமாகி துன்பம் நீங்கினவரானர், பழம் பழியாகிய ஆதித்தகப்பன் செய்த பழிக்குட்பட்டு நித்தம் துன்பமுறைந்த மனிதரே, ஆண்டவன் ஏவல் ஊழியம் செய்ய விளக்கமாகும் அன்பைக்கொண்டு பணிந்து தொழுவீராகில் உமது உள்ளத்திலுள்ள நோயும், கெட்ட ஆசையும் அற்றுப் பரமகதியை முற்றும் பெற்று வாழலாகுமென்க. (87)

## விருத்தம்.

ஆகுலமுற் றெந்நாளு மகத்தினைந் தாற்றுவீர்காள்
சோகுல விற்றளர்ந்து துகளின்முற் றுழலுவீர்காள்
வாகுலா நசரைமன்னன் மறைநெறி தொடர்வீராகிற்
கோகுல முக்தரோடு குணிக்கரு நலம் பெற்றுய்வீர்.

(இ-ள்) வியாகுலம் கொண்டு எந்நாளும் மனது நொந்து அழுவோர்களே, பிசாசுவாதைகளில் தளர்ந்து பாவத்தில் முழுதும் உழல்வோர்களே, அழகு உலாவிய நசரைநாயகன் வேத நெறி வழியைத் தேடி பின் செல்வீராகில் மோக்ஷகுலத்தாராகிய முத்தரோடு மதிக்க அரிய நன்மை பெற்று உயிர்வாழ்வீரென்க,()

### விருத்தம்.

பெற்றியிற் பற்றாறு மற்றவ சுத்தரே
குற்றமற் றுற்றநற் பத்தியுட் பற்றவே
நிற்றலைப் பற்றிட முற்றுமின் னசரையின்
கொற்றவ னற்புகழ் சொற்றுவீர் நித்தமே.

(இ-ள்) நற்குணம் வற்த்திக்க ஆசைப்பட்டு வலிய தவம் செய்யும் சுத்தவான்களே, குற்றமில்லாத தேவபக்தியுள் பத்தி எரியவே அந்நிலையைப்பற்றிப் பிடிக்க, முற்றும் ஒளிநசரையின் அரசனை நித்தம் பல புகழ்ச்சி சொல்லுவீரென்க. (89)

### விருத்தம்.

நித்தியனே நசரைநக ராளுங்கோவே நின்னாலே நானுலகி லுருவதானேன், நத்தியமா யென்னால்நீ யுருவதானாய் தாழ்வான வென்னுடனீ யெடுத்துக்கொண்டு, சத்தியுளதாக்கினாய் புன்மை போக்கித் தகைமேன்மை பொருந்தியநல் லுருவமாக்கி, முத்தி யினில் வீற்றிருக்க வும்பரெல்லா முயற்சியுடன் போற்றிவைத்தாய் முடிவில்லாதே.

(இ-ள்) எப்போது முள்ளவனே, நசரை நகராளும் அரசனே, உன்னாலே நான் உலகத்தில் மனுவுருவானேன், மெய்யாக என்னாலே நீ மனுவுருவானாய், நீசமான என்னுடலை நீ எடுத்துக் கொண்டு வல்லமையுள்ளதாக்கினாய், அதின் நீசனத்தனத்தைப் போக்கி அழகும் பெருமையும் பொருந்திய நல்ல உருவமாக்கி பரமகதியில் வீற்றிருக்க, வானவர் எல்லாரும் முயற்சியாய்ப் போற்றிவணங்க வைத்தாய், முடிவில்லாத காலமென்க. (90)

### வண்ணவிருத்தம்.

முடிவுமின்றியடி நடுவுமின்றியுரு வுடனுமின்றிநிலை முதல்வனீ, வடிவுகொண்டுநல பரிவுகொண்டுதவ படிவுநன்றுபய னுறவுயிர், மடிவுகொண்டுமறு படியெழுந்துலகில் மனிதர்நன்குறவு வளரவும், வடிவுகொண்டதிரு நசரையம்பதியில் மகிழ்வுகொண்ட மறை யரசனே.

(இ-ள்) முடிவுமின்றி, துவக்கமும் நடுவுமின்றி, உருவுடலின்றி நிலையான முதல்வன் நீ, உருவங்கொண்டு நல்லன்பு கொண்டு தவநோன்புக்கு நன்மைப்பயன் சித்திக்க, உன் உயிரை மடியக்கொடுத்து மறுபடி எழுந்து உலகத்தில் மனிதருடன் நன்மை உறவுண்டாக்கி வளர்ந்தாய், வடிவங்கொண்ட திருநசரைப்பதியில் மகிழ்ச்சியாய்க் குடிகொண்ட வேதத்தரசனேயென்க. (91)

## விருத்தம்.

மறைபுரைத்திடு மொழிகளற்பமும் வழுவிலாதநற் றெரிசிகள், முறையுரைத்தனன் மொழிவழாமலே முழுதியற்றிய முதல்வ, னறையுருத்ததென் னசரையூரிலே நலமிகுத்துறை கடவுளா, முறையுருத்தநீ ரெனவரங்களை யுலகிற்சிந்தின னுய்யவே.

(இ-ள்) வேதமுரைக்கு மொழிகள் அற்பமாகிலும் வழுவாமல் நடக்கும் நல்ல தீர்க்கதெரிசிகள், முறைமையாய் உரைத்த நற்சொல் வழுவாமல் முழுதும் நிறைவேற்றிய முதல்வனவன், வாசம் பொழியும் பூஞ்சோலை சூழ்ந்த அழகிய நசரையூரிலே அதிக இன்பமாய்க் குடியிருக்கும் கடவுளான், மேகம் சிந்திய நீர்போல வரங்களை உலகத்தில் சிந்தினன் மனிதர் உயிர் வாழவென்க. (92)

## விருத்தம்.

உய்யவிவ் வுலகமைந்த ரோங்கிய தயையின் மாட்சி
மெய்யரும் பயனையாரும் விளம்பிடக் கூடாதந்தத்
துய்யரும் பயனைக்கொண்டு தூக்கிவிண் ணுலகிற்சேர்த்தா
னையரு நசரையூரி னளியருட் கொடையுள்ளானே.

(இ-ள்) இவ்வுலக மானிடர் உயிர்வாழ உயர்ந்த தயையின் மாட்சியின் உண்மையுள்ள அரும்பயனை யாவரும் கூடி சொல்லக் கூடாது, அந்தத் தூயரும் தயைப்பயனைக்கொண்டு மனிதரைத் தூக்கி வானுலகத்தில் சேர்த்தான், அழகிய நசரையூரிலிருந்து அன்பும், தயையும், கொடையும், தானமும் கொடுக்கப்பட்ட கடவுளென்க, (93)

## தாழிசை.

உள்ளமீது நன்குவைத்த வுண்மைமெய்ய ரல்லது
கள்ளஞான வேடமாகக் காட்டுகின்ற நீசரே
பள்ளநீ ரிருக்குமேடு பற்றிகானல் சுற்றுமே
வள்ளல்நசரை யருடவர்க்கு வன்னிமற்ற வர்க்குமே.

(இ-ள்) உள்ளத்தில் நன்மை வைத்துக்கொண்டிருக்கும் மெய்யான முனிவரல்லாமல், கள்ளஞான வேடம் காட்டுகின்ற நீசரே கேளுங்கள். பள்ளத்தில் தண்ணீர் இருக்கும், மேட்டில் கானல்பற்றி சுற்றுமே, அங்ஙனம் நசரை வள்ளலின் குளிர்ந்த தயை மெய்யான தவசிகளிடத்தில் இருக்கும், மற்றவர்க்கு அவன் தரும் ஆக்கினையான நரகத்தீ உண்டாமென்க. (94)

## விருத்தம்.

மற்றுமொரு பொருணிகரா நசரைமேவு மன்னனருட் டிரு வுளத்தின் மாட்சிகேண்மின், பற்றுறுமிப் பாரோரை மீட்கத்தானும், பாடுபட விசைந்திடுங்காற் பகைஞர்பற்றி, முற்றுமவ ராற் கூடும் வாதைசெய்து, முனிந்துகொல்லுங் கொடியவர்மே லிரக்க மாகிப், பற்றுறுஞ் சொல்லாகநற் றாதைநோக்கிப் பாவிகள்செய் பிழைபொறுமென் றிரந்தாரன்றே.

(இ-ள்) மற்றொரு பொருளும் உவமிக்கரிய நசரையில் மேவும் அரசன் தயையுள்ள திருவுளத்தின் பெருமையைக் கேளுங்கள், அஃதெங்ஙனமெனில் உலகத்தை விரும்பிய மனிதரை மீட்க தான் பாடுபட இசைந்தபோது. பகைவர் பிடித்துத் தங்களால் கூடுமட்டும் துன்பம் செய்து சினந்து கொல்லும் கொடியவர்மேல் இரக்கமாகி அன்பான சொல்லாய் நற்பிதாவை நோக்கி, இந்தப்பாவிகள் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்ளுமென்று வருந்தி மன்றாடினாரென்க. (95)

### விருத்தம்.

இரங்காதநெஞ்ச னரங்கானவஞ்ச னிழுக்கானவெஞ்சன் முழுப் பாதகமுமா, யுரங்காழகத்த னுறுங்காய்மகாரி யுணரற்கேடு மிகவவப் பேதகமுழுட், டிரங்கொண்டபாவிக் குணம்விண்டகத் திற் செயிர்க்காக நொந்தேன் றிருச்சேருநசரைப், புரங்கொண்ட வள்ளல் வரங்கொண்டநின்றுட் புலந்தன்னில்வைத்தின் னலந்தா ருமிகவே.

(இ-ள்) பிறர்க்கு இரங்காத நெஞ்சன், வஞ்சகத்தில் அழுந்திய வஞ்சகன், ஈனமுள்ளகோபி, முழுதும் பாதகத்தில் பலத்த வைராக்கிய மனமுள்ளவன், அதிக காய்மகாரி, நினைப்ப தெல்லாம் கேடு நினைவா மவப்பேதகத்தின் நிலைகொண்ட பாவி யான நான், என்துர்க்குணங்களை விட்டு இந்தப் பாவங்களுக்காக மனம் நொந்தேன். திருச்சேரும் நசரைமாபுரத்தில் குடிகொண் டிருக்கும் உனது ஒளியுள்ள பாதத்தில் என்னைச் சேர்த்து வைத்து இன்ப நன்மையைத் தாருமென்க. (96)

### விருத்தம்.

மிகவுநயந்திகழ் மகிமைவளந்திகழ் வெளியொளியுந்திகழத்
தகவுநயந்திகழ் மறைவடிவந்திகழ் தருமமயந்திகழத்
தகவுநயந்திகழ் நசரையினேசுவை சகலநயந்திகழுந்
தகவுநயந்தெனை யடிமையுறச்செயுந் தகைமைவரம்பிலவே.

(இ-ள்) அதிக நன்மை இலங்கவும், மகிமையும் பெருமை யுமிலங்கவும், மோட்சப்பிரகாசம் முன்னிலங்கவும், உரிமையா கிய நன்மை இலங்கவும், வேதவடிவ மிலங்கவும், தருமமயமாய் இலங்கவும், நற்குணமிலங்கிய நசரையேசு நாயகனே சகல நன்மையும் இலங்கும் உனது தயவைத்தந்து என்னை அடிமை யாகச் செய்யும் பெருமைக்களவில்லையென்க. (97)

### விருத்தம்.

வரம்பிலா நடுவோய் முன்னாள் வாழ்ந்திடு மெசித்து நாட்டைப்
பிரம்பினால் வருத்தஞ்செய்து பெருகிய விசறே றம்மை
வரம்பலித் திடுகமீட்டு வரம்பொழி நாட்டைத்தந்த
கரம்பிணர் நசரை மன்னு கயவனைப் பதத்திற் சேராய்.

(இ-ள்) அளவில்லாத நீதியுள்ளவனே, முன்னாள் வாழும் எஜிப்து நாட்டில் சேர்ந்த இசறேல் ஜனங்களை இரட்சிக்கும்படியாய் மோயீசனைக்கொண்டு பிரம்பினால் அந்நாட்டிலிருப்பவர்க்கு வருத்தம்செய்து நிறைந்திருந்த இசறேல் ஜாதியாரை வர பயன் உண்டாக மீட்டு மதுப்பொழியும் நாட்டை அவர்க்குத்தந்த கிரணவடிவாகிய நசரைக்கிறைபவனே நீசனாகிய என்னை உன் திருப்பாதத்தில் சேர்த்தருள்வாயென்க. (98

வெண்பா.

சேர்ந்துனதுபாத தெரிசனையைக் கண்டுகளித்
தார்ந்திருக்குங்காலமறியேனே—கூர்ந்தொளியுண்
மண்ணியமா நன்னசரை மன்னவனைப் பாடினே
னண்ணியவா னின்பருந்த நான்.

(இ-ள்) உனது பாதத்தில் சேர்ந்து, பாததெரிசனையைக் கண்டு களிகூர்ந்திருக்கும் காலம் எக்காலமென்று நான் அறியேனே, அதிக ஒளியுள்ள அலங்காரமாகும் நசரைமன்னவனே உன்னைப் பாடினேன், நான் சேரவிரும்பிய வானுலகிலுள்ள பேரின்பத்தை அருந்தவென்க. (99)

கையுறைகொடுத்தல். கலித்துறை.

நானுவப்பாக நசரைமன் றந்தவிந் நன்மணியே
வானுவப்பா மணியோ வுயிர்வாழும் வரம்மணியோ
வேனுவப்பா மணியன் பெனுமாமணி விண்ணமரர்
கோனுவப்பா மணிமும்மணி யொன்றுங் குருமணியே.

(இ-ள்) நான் மகிழ்ச்சியாக, நசரைமன்னவன் தந்த இந்த நன்மணியே வானுலகில் உயர்ந்த மாமணியோ, ஆத்துமத்தை வாழ்விக்கும் வரமணியோ, அதிக மகிழ்ச்சியாய்த் தயையென்னும் மாமணியாம், வானவர் மகிழும் அரசான மணியாம், பிதாச்சுதன் இஸ்பிரீத்து சாந்தென்னும் மூன்று மணியும் ஒன்றாகிய ஒளிமாமணியாமென்க. (100)

நசரைக்கலம்பகம் முற்றிற்று.

# அன்னையின் பிரலாப வண்ணம்.

## முதல் வண்ணம்

இராகம்—புன்னுவராளி—தாளம்—ஆதி

தான தனத்தனனு—தன—தானதத்தனனு—தன
தானதத்தன தானதத்தன
தானதத்தன தானதத்தன
தானதனந்தனனு—தன—தானதந்தனனு—தன
தானதந்தன தானதந்தன
தானதந்தன தானதந்தன
தந்தனத்தந் தன தனத்தந் தனதனு

---

ஆதி திரித்துவமா மறை யாகமப்பொருளா-மச
ரீரிதற்சுய மரனநித்திய
னுறிலக்கண னுனதற்பர
னுதியு மந்தமிலா தவி யாபகன் புவிவா-னெடி
யாவையும்புகல் பூதமைம்புல
மேதுமொன்றுமி லாதபோதினி
லோர் நொடியிற்றனிலே யுள வாவமைத்திடுகா-ரண
னேதிலக்கற வானகத்தமை
யூனமற்றிட ரூபரிற் சில
ரோதுமகத்தையினு னர கூடுறைந்திடவே-சில
ரோகைநன்கதி வாழ்வுகந்தத
னேடிலங்கவு மீளவே பர
னர்புவியிற்றனிலே திகழ் பூதியத்துடனே-யத
மேவவையைத்திற னல்வாத்துட
னுகமுற்றிட வேசிறப்புட
னுகவனந்தனிலே வில கோர்தருங்கனியா-னதை
யாதமங்கவை யோடருந்தத
லாலுறும்பழி நாசமாகவே
இம்பருக்கம் பரமனுச்சென் றிலகவே (1)

ஆரணசத்தியமா மறை யாகமப்படியே-யரு
வானதற்பர ஹீதிசிற்பர
ஞுக வித்தரை மாதொருத்தியை

யார்கலியின்றிரைசூ ழுல காளுமன்றவிகோ-னரி
தானவங்கிஷ மீதுறைந்தரு
ளானசம்ப்ரமி யானதோர்கனி

மாசறுகற்புடையாண் மரி மாதுபுத்திரனார்-கவி
மாநிலத்தொரு காரணக்குரு
வாகவற்புத மேசெய்திப்புவி

மானவருங்கதிவாழ் மறை யோதிமுன்புரிதீ-வினை
மாளவெந்தைபி தாவுகந்திட
வானகந்தரு மீதிலேதமை

யாதரையிற்றனிலே பலி யாவமைத்திடவே-மனு
வாயெடுத்துடல் பூதர்கைத்திற
மாவளித்தவர் பாடுபட்டுமெய்

யாகவுயர்ந்திடுநீ டுக பாலகுன்றதிலே-யதி
பாரமென்குரு சேசுமந்தவ
ராய்நடந்தவி சேஷமாகிய

தம்பமற்றந் தனைமரிக்கன் றறையவே் (2)

சோதிதிருச்சுதனு ரவர் சீஷரிற்கருணு-முனி
சோபமுற்றதி தீவிரத்தொடு
தூயவர்ச்சிய தாய்பதத்திடை

தோயவிழுந்தழுதே பிர லாபமிஞ்சிடவே-துய
ரோடெழுந்தவர் வாய்திறந்துசு
தாபரன்றன தாயரேதுயர்

சாகரமுற்றவளே தவி ராதகற்பரசே-தவி
ராதகற்புட னேயபுத்திர
ஞனசத்திய நாதரைத்தரு

தாயெயணங்கரசே தவ ஞானசுந்தரியே-தவ
ராசவங்கிஷ மீதிலங்கிய
வாயிநின்சுதர் சேசுநாயகர்

தூயசெனக்கொலுவா மனே மேவுசிஷ்ட்டரையே-யிரு
தாள்விளக்கிய தேவநற்றசை
சோரிபக்ஷண மாவளித்தவர்
தோழருடன்செதுரோ னதி யேகடந்தொருகா-விடை
சோதியுஞ்செப மேவருந்தவெ
சூதெசென்றெருரு சீஷன்யூதர்க
டங்கள்கைக்கின் பணவிலைக்கென் றிசைத்தால் (3)

சூதெசுமுப்பதுகா சுதெ ஞரிகைக்குறவே-விலை
சூதருக்குள வாகவிற்றிட
நாறியக்கண மேயிருட்டொரு
சோலைவனந்தனிலே கொலை சூதெசின்பிறகே-சில
யூதருங்கொலை யாளரும்பிணி
பாசமுங்கொடு வாளும்வேல்களு
மாயுதமுற்றவரா யதி தீவிரத்துடனே-யடை
யாளமுத்திசெய் தேகொடுத்திட
மானமற்றிட வேபிடித்தவர்

ஆனசுவென்பவனே டுகை பாசினண்டையிலே-யதி
பாதகங்களை யேபுரிந்துபி
லாதுசங்கவை யேவிமீளவெ
தூணெடுகட்டியையா யிர மேலடித்துமுளான்-முடி
சூடியக்கண மேகொலைக்கிரு
சோரரொக்கவெ ஞதரைக்கொடு
தோளின்மிருங்கனமா யுறு நீளுமன்குருசெ-சுமை
யாகவும்பல வாதையும்புரி
யூதர்சென்றக பாலமேருவி
லென்குருச்சென் றனனைக்கிங் கிவைசெல்வான் (4)

சேதிதவக்கருண முனி வோனுரைத்திடவே-செவி
யூடுறச்சதி வேறுளைத்தன
வேபிரக்கினை போய்மயக்கொடு
தேகநடுங்கிடவே யதி சோபமிஞ்சிடவே-செக
மீதலம்புலி போல்விழுந்தழு
தேமிகுந்துய ராகினுளனை

ஞாலமதிற்கொளுமோ பர நாடதிற்கொளுமோ-திகழ்
நானிலத்தர்கள் வானபத்தர்க
ளுவொருப்பட வேயிசைக்கினா

நாவிலடங்கிடுமோ துய ரோதவும்படுமோ-தவ
ராசமின்கொடி யாள்படுந்துயர்
நாடவும்பிர லாபமோடவள்

சேருசலெக்திருவா லய மீதினிற்சிமியா-முனி
நீடுகெத்திக ளூடுதைக்குமெ
னோதிவைத்திடு வாசகப்படி

தீவிரம்வந்ததுவோ வடி யாடனஞ்செயனே-செக
மீதிலுன்றனை யானிழந்துய
லேதுதஞ்சமி லாதயானினி
யென்றிரக்கம் படவுரைத்தங் குருகினாள் (5)

சேருசெலத்தெருவே யனை தேடியிப்புவிமீ-திரு
கான்முடச்செவி டனைமகட்குரு
டனைமற்றிட வூன்மரித்தவர்

சீவனடைந்திடவே சதி சேர்கணங்களெலா-மெரி
தீயில்வெந்துற வேநவம்புரி
தேவனன்சுத னையூதர்கள்

போதவடித்துமுளா முடி சூடியந்தெருவே-புய
மீதினிற்பணை யேசுமத்தியெ
போனதித்தட மோகொலைக்கவர்

போனதுகண்டிலிரேர விரு சோரர்தங்களொடெ-புகல்
வீர்களென்றனை வாய்புலம்பியெ
போனமுன்குழு வாகவேயவள்

சேறல்விழிக்கெதிரே சில மார்தருற்றிடவே-யனை
தேடிமெத்தவி யாகுலத்தொடு
தீவிரத்தினில் போதலுக்கவர்

தேடிமயங்குவளா ரிவ ளாவியின்களைபா-ரிவள்
சோகமும்பிர லாபமும்புகல்
சேசுவென்றவர் தாயராமென
வென்றுரைத்தங் கெதிர்வரக்கண் டனைசொல்வாள் (6)

மாதர்செருச்சலெமே வியதாய்தமக்கையரே-யடி
யாளொருத்தியெ னேயபுத்திரர்
மாநிலப்பழி யால்கொலைக்கிரி

வாயிடைகொண்டடைவா ரது நீரறிந்திலிரோ-வகை
கூறுமென்றனை யோதமின்கொடி
யார்கணின்றுசொல் வார்கடாயரெ

யாதரையிற்சுதனு ரவர் சாயலெப்படியோ-வடை
ய ளமெப்படி ரூபமெப்படி
யாமுரைக்குமு னீவழுத்தென

ஆவையெனுங்கனிமா மரி யாளினஞ்சொலுவா-ளழ
கானசெங்கனி வாய்முகஞ்சிர
மானவஞ்சிறு ரோமரேகைகள்

வாலிபமுற்றவராய் வடி வோமிகுத்தவராய்-மதி
நேர்முகத்திடை சாயலிப்படி
வாலசித்திர பானுவொப்பென

மாதவளுஞ்சொலவே மட மாதருஞ்சொலுவார்-மரி
மாதெயிந்தடை யாளமொன்றிலை
மாறுகொண்டது மேனியாகமு

மங்கிரத்தஞ் சொரிதரச்சிந் தடியினால் (7)

வாதைசிரத்துமுளோ வவர் தோளினிற்பணையோ-வலி
யோடுகைத்தல மேபிணித்துயர்
மார்கழுத்திடை யேவிசித்தவர்

வாள்கள்பிடங்குகளால் வலு வாநலிந்திடுவார்-வகை
பேசிமைந்தனை மார்முகந்தனி
லேயுமிழ்ந்திடு வார்கள் பாவிகள்

சேசுவெனச்சொலுவா ரிவ னேவெனக்குலைவா-ரிவன்
மாயவித்தைக ளான்மிகுத்தபொ
லாததுர்ச்சன னுமெனச்சொலி

யீனமறைந்திடுவார் வெகு தூஷணஞ்சொலுவார்-முக
மீதறைந்தெரி போலழன்றுபொ
லாதவஞ்சக ரானயூதர்கள்

வாள்கள்விதிர்த்திடுவார் பறை யேமுழக்கிடுவார்-வலு
வோடுகுப்புற வேவிழத்தளி
யேயிழுத்திடு வாரதட்டிடு

வார்கள்சினந்தெரிவார் வலி யூதர்தங்களொடே-வரு
வாருன்மைந்தனை யேதொடர்ந்தழு
மாறுகண்டெமை யோதுவாசக
முங்களுக்கும் பிதிருக்கென் றழுமினோ (8)

---

## 2-வது வண்ணம்.

ஈரமரத்தினையே தழ லாயெரித்திடுதீ-யுயி
ரானதற்பமி ராமரத்தினை
யேயதெப்படி யாயெரித்திடு
மீதையறிந்துணர்வீ ரென வோதுமுன்சுதனுர்-முக
மீதிலங்குமி நீர்களின்கறை
வேர்வையும்படுஞ் சோரியானதை
யோர்துகிலைக்கொடுயான் முக மேதுடைத்ததினு-லதி
ரூபமப்படி யேபதித்தசு
ரூபமத்தைவி ரோணிகைக்கிடை
யோவியமென்றதிலே யவர் சாயல்கண்டதினு-லதை
யோதகந்தனி லேமுகந்தனி
லேயணிந்துகொண் டோதுவாளனை
யீனர்வருத்தியதான் முகம் வேறுபட்டதுவோ-மக
னேயெனச்சொலி யாகுலத்துட
னேகுமப்பொழு தேதடத்திடை
யேயுதிரங்களொழா வொழு கானனேந்தடியா-னதி
தேதுவென்றனை கூறவுங்கரு
ணுகரன்சொலுஞ் சேசுநாதரை
நடத்திடப்பொற் பதமலரின் குறிப்பிதே (1)
ஏகுவதெப்படியோ வவர் போதலைத்தெருவோ-மக
னேயிளைத்தனை யோதவித்தனை
யோவெனத்துய ராயரற்றலொ
டேதினியென்புரிவே னென தாதியம்பரனே-யும
தேகநன்சுத ஞரென்மைந்தனை
யீனர்கொண்டுசென் றேகவேயவர்

மேனிவடுப்படுமே தழல் வேலயிற்சுடுமே-பல
வேதனைக்கொடு தோளிடைக்கன
மேதடத்திடை யேசுமத்திட
வேனின்மிகுந்திடுமே திரு மேனிவெம்பிடுமே-திரு
மேனிவெம்பிவி டாய்மிகுந்தத
ஞல்விழுந்துகொந் தாவிசோருமெ
யினரிழுத்திடவே நில மீதுறைப்புறுமே-யெளி
யாள்வயற்றினி லேயுதித்தவெ
னேயபுத்திர ஞரெயிப்படி
யேதுயரங்களொடே மக னேநடந்தனேயோ-விடி
யோபிரம்படி யோபிடங்கிடி
யோவிஷங்கொடுஞ் சூதரானவர்
பிடித்திழுக்கத் திருவுடலம் பொறுக்குமோ (2)
சோரர்கொலைக்களமா னது தூரமெத்தனையோ-தலை
தூரமெத்தனே பாரெனத்துய
ரோடுநற்கரு ணைகரத்தவ
தூயவனுங்கனிமா மரி யாளுடன்சொலுவா-னதி
தூரமிங்கிலே யேயடர்ந்தது
ரோகர்வன்கொடுஞ் சூதர்சேவக
ரேகதிருச்சுதனு ரையி தோநடத்துகிரு-ரிதி
தோமுழக்கமி தோமனுக்களி
தோவிரைச்சலி தோகொலைக்கள
மேகிநடந்திடுவீ ரிவை தாமதஞ்சொலுமோ-வென
வோநடந்தன ளாதிமைந்தனே
யேதொடர்ந்திடுந் தாயர்காணெவெ
சோதிதிருச்சுதனர் குரு சோடுகுப்புறவெ-யவர்
சோபமுற்றவ ராய்வினைக்கொலே
யூதர்கைப்புடை யாலிடிக்கவே
தூயசுதன்றனேயே தழு வாவணேந்தனளா-யடி
யூதர்வன்பொடு மேயிகழ்ந்துக
பாலமென்றகுன் றேறியேயவர்
கொலைக்களத்திற் சிலுவையையங் கிறக்கினர் (3)

சூதர்கொலைக்களமே வியநாதருற்றிடுதா-கம
தோயகைப்பிர சானபிச்சதை
யேகுடித்திட வேகொடுத்தவர்

தோலுரியுண்டதிலே சுதனாரதங்கமெலா-மிகு
சோரியின்கசை யேநனைந்துட
னேயுலர்ந்திடுந் தேகமுழுற

வாணமதைப்புதிதா கவெயாடுரித்தனபோ-லுரி
வோடுகோர்த்தர்கை காறுளைக்கமு
வாணிதைத்திரு சோரருக்கிடை

யூணிரந்தரமீ துடலேகுலுங்கிடவே-யுயர்
வானினெந்தையா டனர்வெம்பிழை
மாறவென்றிரந் தோதவேவெகு

தூறுமிகச்சொலியே கொலையூதரொச்சியமா-கவெ
தூஷணித்திட வேயிடத்துறு
சோரனெத்திட வேவலத்துறு

சோரன்வணங்கிடவே யுயர்வானினந்தமொடே-துலை
யாதநன்கதி சேர்வையென்றனர்
யூதரங்குநின் றூர்கடாப்மரி

வலப்புறத்திற் றுயரொடுநின் றரற்றுவாள் (4)

சோரர்களுக்கிடையே சுதனைகர்த்தரையே-மிகு
தூஷணத்தொடு சால்கரத்திடை
யேயிருப்புமு ளாணிதைத்தமெய்

சோரிசொரிந்திடவே யுடலாவிதொய்ந்திடவே-துயர்
வாள்களம்புகள் சேரகந்தனி
லூடுழைந்துநொந் தேகதாதையொ

டேதம்வினைத்திடுவார் பிழைநீர்பொறுத்திடுவீ-ரென
வேகநற்சுத னார்தமைப்பலி
யாவளித்துமு னொசித்துவி

லேகபரன்சுதனே யிழியூதர்தங்களை நீ-விலை
யீனவெஞ்சிறை மீளவுங்க்ருபை
நீர்செய்நன்றிகொன் றூர்கள்யூதரி

தோர்சிலுவைத்தருமே லுமையீனர்வைத்தனரே-சுத
னைதற்பர னேயெனத்துய
ரோடுவர்ச்சிய தாயர்நிற்கவெ

சோதிபரன்சுதனார் குரு சோடிருந்தெழுவா-சக
மேபுகன்றாய ராவிதுஞ்சினர்
தீயவஞ்சருங் காணவேயவர்
மரித்திடத்திற் சிலநவம்வந் தடுத்ததால் (5)

சோபமுறச்சுதனார் பணை மேன்மரித்திடவே-துயர்
சாகரத்தினி றாயர்நிற்கவு
லோகமொக்கவி யாகுலத்தொடு
சூரியனுங்களைசே ரொளி போயிருண்டதுமா-சுறு
யூதரஞ்சினர் பார்திறந்தக
பாலமென்கலும் போழ்தலாயுற

வாதிமுதற்பரனார் திரு வாலயத்திரைதா-னது
வேகிழிந்திரு கூறெனப்பட
வாகுலத்தொடு தாயரற்றாவ
ளாவிபிரிந்ததுவோ மக னையிறந்தனையோ-யுனை
யாணிழந்துமெ னாவிகொண்டுமுய்
வேனோவென்றநின் றாவிசோரவே

சோதிசடத்துவிலா வினி னேரிசத்ததனா-லொரு
மூடனிட்டுர மோடுகுத்தவே
சோரியொக்கநன் னீர்குதித்தன

சோபமுடன்கனிமா மத லேனவுங்கருணா-கர
தூயனுந்துயர் மூழ்கவுங்கதிர்
மேன்மறைந்தனன் கோடிமாழ்கிட
திருச்சடத்தைச் சிலுவையினின் றிறக்கவே (6)

ஆரணசிஷ்டர்களா மிரு சீஷரக்கணமே-திரு
வாணிதைத்ததை யேவிடுத்துமெய்
கீழிறக்கவி யாகுலத்தொடு

தாய்மரியங்கையிலே கொடு தாவிமைந்தனையே-மடி
யாசனந்தனி லேயமைந்தற
வேயணைந்துநொந் தேசொல்வாளிது

வேதவிதிப்படியோ முனி வோரெழுத்துகொலோ-மிக
வேழைபுத்திர னாகவிப்படி.
மீதுதித்துயிர் தானிழக்கவெ

பூமிசைமுந்தினரா மத மேவையின்பிழையோ-வென
வேமிருந்திர ளாயழுங்கணி
ரால்வடிந்துறுஞ் சோரிமேனியி
லாடைவிடுத்ததிஞ லபி ஷேகமுற்றினளா-யுயர்
வானநற்கமழ் வாசவர்க்கமெ
பூசிநற்றுகி லான்மறைத்தவர்
பூதரநன்கலிலா மறை மீதமைந்திடவே-செய
லானபின்செரு சேலெயம்பதி
போயடைந்தபின் சேசுநாயகர்
பிதிர்க்களுக்குப் பரகதியங் களிக்கவே (7)
ஆதரையுட்புதைவா கிய பாதலத்தினிலே-யபி
ராமடிக்குறு வோர்பிதிர்க்களை
வானுறக்கதி யேறுவித்துமெ
யானசடந்தனிலே யுயிர் கூடிவந்தறைவாய்-திற
வாவெழுந்துவி ணேறியெந்தைபி
தாவலஞ்சிறந் தார்நிவாசமாய்
மேதினிமுற்றிடுநாள் புவி மீதினிற்கதிர்சேர்-மதி
வீறுடுத்திர ணீள்கடற்றிரை
பூதியத்தோடு சேர்மனுக்குல
தேகமெரிந்திடவே வட வாயெனுந்தழலா-மனு
மீளவந்தவ ராவியங்கமொ
டேயெழுந்துறும் பாரிலேயுற
வாதி திருச்சுதனர் முகில் வாகனத்தினிலே-யவர்
மேவவக்கண மேவலத்திட
மாகநிற்பர்க யோர்துர்ச்சனர்
பாவநிகழ்ந்திடவே வரு வாரினங்கடைநா-ளவர்
பாதசெந்தளி ரேநிதம்புரி
பேறுதந்திடுஞ் சேசுநாயகர்
பொதுக்கணக்குத் திருநடுவங் கியற்றுவார் (8)

அன்னையின் பிரலாபவண்ணம் முற்றிற்று.

---

# சேசுநாதர் திருப்பாடுகளின் பேரில் பரணி.

வலதுகரத்தி லிடியேந்தி மற்றோர்கரத்தின் மறையேந்தி
இலகுஞ்சீன மலையதனி லெமக்குநிருபம் வகுத்தனனே
உலகிற்பரத்திற் பராபரத்தி லொடுங்காதடங்கா தளவில்லான்
அலகிற்கடவு ளோர்கன்னி யகட்டிலொடுங்கி யடங்கினனே.

அருவாயளவிற் பரஞ்சோதி யனாதிசுதனா யகண்டபிரான்
உருவாயொருதாய் மகவாகி யுலகின்மனுவா யுதித்தனனே.

காந்துங்கதிரோ னும்மதியுங் ககனம்புவன மனைத்தினையும்
ஏந்துங்கரத்தா னொருமடந்தை யேந்துங்குழந்தை யாயினனே.

விண்ணிலங்கு நவசேனை வியப்புற்றிறைஞ்சக் கொலுவிருப்போன்
மண்ணிலெளிய மனுக்குலத்தார் வசைவுற்றிறைஞ்ச விசைந்தனனே.

அண்டகடாக முடைந்துசல மன்றுபெருகி மனுக்குலத்தார்
கொண்டகொடிய பவந்துறப்போன் கோபப்பெருக்க மறந்தனனே.

ஆயவுகத்தின் கடைநாளி லகிலநடுங்க நடுவுரைப்போன்
தீயநடுவுக் குடனாகத் தேவர்நடுங்கச் செயலென்னே.

அண்டம்புவனம் பாதாள மனைத்தோர்விரலா லசைத்திடுவோன்
கொண்டசிலுவை சுமைசுமக்கக் கூனித்தளாந்து குறுகினனே.

இன்றுகபால மலைக்கோட்டி லிருகால்கரமு மோர்மரத்தில்
ஒன்றப்பிணித்துக் கூரிரும்பே யுருவவறைய வுவந்தனனே.

மலைமீதுயர்ந்த சிலுவையின்மேல் வனசபதமு மிருகரமு
நிலையாயறைந்த முளையுருவ நிறைசெம்புனலும் பெருகிடவே.

கோபப்பெருக்க மறந்தவனே கொலைப்பட்டுயர்ந்த மலைமுகட்டில்
சோபப்பெருக்க முறத்தனது சோரிவெள்ளஞ் சொரிந்தனனே.

தலைசாய்த்திருக்க விடமுளதோ தரித்தமுள்ளின் முடிவருத்த
உலகாய்மனுவா யனுபவத்தி லுருகுமுருகுந் திருவுளமே.

தோயுமிரத்தக் கறையுடலுந் துரியவுமிழ்நீர்க் கறைமுகமும்
வாயின்கசப்பை யருந்தியிதோ வருந்தும் வருந்தும் பரஞ்சுடரே.

குவியுமலர்க்கண் ணீர்பெருகுங் கொடியோர்மொழியுந் தூஷண
செவியும்வருந்து மாறுதலாய்த் தேறுமிடமொன் றில்லையன்றே.

என்றும்பரத்திற் பிதாவலத்தி லிருந்தெவ்வுயிர்க்கு முயிரளிப்பே
குன்றிற்சிகரங் குருசேறிக் கொலைஞர்நடுவி லிறந்தனனே.

மேகசிங்கா சனத்திருந்து விமலர்சூழ நடுவுரைக்கும்
ஏகனெளியேன் குற்றமொழித் திணையின்முத்தி யளிப்பவனே.

# இந்நூலைப் புதிப்பித்துத் தந்த

## தஞ்சை ஸ்ரீமான்

### அ. பொன்னுசாமி நாடாரவர்களுக் கோர்

### வாழ்த்து

இராகம்—இந்துஸ்தான் காம்போதி—தாளம்—ஆதி

கண்ணிகள்

தருமமே யுருவாய் வந்த சற்குண பூமான்— நல்ல
தஞ்சை நகர்பொன்னு சாமிநாடாரென்னும் தக்கதோர் சீமான்
தரணியில் நசரைக் கலம்பக மோங்கத் தானதைப் புதுப்பித்தார்
தயையுடன் பொறுமை சாந்தமோடிலங்கச் சகலர்க்குமே யளித்தார்
தழைத்தவ ரோங்கியே வாழ்ந்திடவே துரை சாமியும் பாடினனே
சாமியும் பாடினனே, சாமியும்பாடினனே, சாமியும்பாடினனே

(தரு)

THE "PURNANANDA PRESS" SOUTH MAIN ST., TANJORE.

இப்புத்தகத்தைக் குறிப்பிட்ட தேதியில் அச்சியற்றி வெளியிடவேண்டி யிருந்தமையால் இப்புத்தகத்தில் நாமறியக்கூடாத அச்சுப்பிழைகள் ஏற்பட்டுள்ளன. அதை திருத்தி இதில் அச்சிட்டிருக்கிறேம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| 1 | 9 | பூவில | பூவுல |
| 4 | 25 | அளவிவிறந்த | அளவிறந்த |
| 5 | 10 | சிலைதயுனுநீ | சிதையினுநீ |
| ,, | 12 | லெங்குந் | லெங்கும் |
| 7 | 19 | தேன்றலார் | தோன்றலார் |
| 8 | 20 | தலைவா | தலைவர் |
| ,, | 22 | வலியினாலும் | வலியினாலுங் |
| 14 | 23 | வழி | விழி |
| 19 | 16 | காற்றுதுய்யதர | காற்றுய்யதர |
| 27 | 2 | க்ன்கள் | கண்கள் |
| ,, | 10 | மெங்கள | மெங்கள் |
| ,, | 24 | தனன | தன்ன |
| 30 | 4 | செம்மெறி | செம்மறி |
| 31 | 12 | புரைப்புத் | புறைப்புத் |
| 32 | 2 | வானுலுக | வானுலக |
| ,, | 24 | மேவலர்க்கைக் | மேவலர்கைக் |
| 33 | 26 | பெருவா | பெறுவா |
| 39 | 29 | தருமும் | தருமமும் |
| 42 | 20 | முயற்சியாக | முயர்ச்சியாக |
| 43 | 5 | ஓங்கலன்பது | ஓங்கலென்பது |
| 44 | 25 | இரவுபகலென்றும் | இரவுபகலென்னும் |
| ,, | ,, | அளளணிந்த | அவளணிந்த |
| 45 | 16 | யொருமித்துயர் | யொருமித்துயிர் |
| 46 | 5 | கடியலரிற | கடியலரிற் |
| ,, | 22 | நலமுறமை | நலமுறைமை |
| 48 | 10 | யெய்கி | யெய்தி |
| ,, | 27 | மயங்கிப் | மயங்கி |
| 49 | 22 | னென்றளனக்கே | னென்றனக்கே |
| 54 | 18 | வுதங்கணிகங் | விதங்கணிகங் |
| 55 | 8 | பார்த்திரைஞ்சி | பார்த்திறைஞ்சி |
| 57 | 10 | யுறைத்தனன் | யுரைத்தனன் |
| ii | 9 | வாகவற்புக | வாகவற்புத |
| iii | 7 | திசைத்தால் | திசைதலால் |
| ,, | 26 | செல்வான் | சொல்வான் |
| ,, | 31 | மீதலம்புலி | மீதிலம்புலி |
| iv | 14 | சேருசெலத் | சேரு[illegible]லத் |
| vii | 23 | சொலுமோ | செலுமோ |

180660
180160

THE
PURNANANDA
PRESS,
TANJORE.